மன்றம்

வார ஏடு

ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 6—இதழ் 2 ★ 12-5-57 சென்னை ★ விலை 16 காசு

பேச்சுக்குச் சமதர்மம், விருந்துக்குப் பிர்லா!

ஆட்டிடையன் ஓநாயுடன் பேரம் பேசுகிருன; காங்கிரசுத் தலைவர்கள் பெரும் முதலாளிகளுடன் கைகுலுக்குகின்றனர்!

சமதர்ம முறையில் இந்தியப் பொருளாதாரத்தை அமைக்கப்போவதாகக் காங்கிரசுத் தீர்மானங்கள் கூறுகின்றன; இந்திய உபகண்டத்தில் இருக்கின்ற கோடீசுவரர்களுடன் காங்கிரசுத் தலைவர்கள் கூடிக் குலவுகின்றனர்!

"சமதர்ம மாதிரியில்", "சமதர்ம அடிப்படையில்" என்றெல்லாம் ஆவடி மாநாட்டில் நிறைவேற்றப்பட்டு தேர்தல் அறிக்கைகளில் பேசப்பட்டதெல்லாம், மக்களின் ஓட்டுகளைப் பெறும் தந்திரமாகவே அமைந்தது. தேர்தல் காலத்தில்கூட, உதட்டளவில் சமதர்மம் பேசப்பட்டதே தவிர, காங்கிரசுத் தலைவர்களின் கண்பார்வையெல்லாம் பணமூட்டைகளைத் தேடித் திரிந்தது. தேர்தலில் வெற்றி பெற்ருக வேண்டும் என்ற வெறியுணர்ச்சியில், மிட்டாதார்கள், மிராசுதார்கள், ஜமீன்தார்கள், ராஜாக்கள் லட்சாதிபதிகள், கோடீசுவரர்கள், எங்கெங்கு பணத்தின் கனம் தெரிந்ததோ அந்த கனம்களை யெல்லாம் தேடித்தேடி அழைத்து வந்து தனது அபேட்சகர்களாக நிறுத்தி வைத்தது. காங்கிரசின் வெற்றிக்கு ஆலையரசர்களின் பணமூட்டைகள் தேவைப்பட்டன, பஸ்முதலாளிகளின் ஒத்துழைப்பு திரட்டப்பட்டது.

வெற்றிபெற்ற காங்கிரசுக்கு மக்கள் மத்தியில் கிடைக்கும் வாழ்த்துக்களைவிட, அடையார் மாளிகைகளிலே — நாட்டரசர்கள் கோட்டைகளிலே விருந்துபசாரங்கள் நடைபெறுகின்றன!

காங்கிரசும் மக்களைப் பாராட்டுவதைவிட பிர்லா போன்ற பணத் தேவதைகளுக்கு பூசையிட்டு துதிபாடுகிறது.

பிர்லா என்று இங்கு கூறப்பட்டது சாதாரணமாக அல்ல. உண்மையில் கடந்த ஏப்ரல் 25ந்தேதி, பம்பாயில் பெரியதொரு விருந்து மண்டபத்தில் ஜி. டி. பிர்லாவுக்கு ஒரு கோலாகலமான விருந்து தரப்பட்டது! விருந்தை வைத்தது பம்பாய் மாநில காங்கிரசுக்கமிட்டி! ஒளிவு மறைவின்றி, நேரிடையாக பிர்லாவைப்பாராட்ட காங்கிரஸ் அதிகார பூர்வமாக விருந்து வைத்தது!

அந்த விருந்தில், பம்பாய் மாநிலக் காங்கிரசுத்தலைவர்கள், பிரமுகர்கள், எம். எல். ஏக்கள் அனைவரும் கலந்துகொண்டு, "காங்கிரசின் உற்றநண்பர், அதிலும் பம்பாய் காங்கிரசுக்கமிட்டியின் ஆப்த நண்பர்," என்றெல்லாம் பிர்லாவைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்கள். இந்த விருந்து வைபவத்தில் முன்பு பம்பாய் மாநிலக் காங்கிரசின் தலைவராகவும் தற்பொழுது மத்திய அரசாங்கத்தில் மந்திரியாகவும் இடம் பெற்றுள்ள எஸ். கே. படில் அவர்களும் வந்திருந்து பிர்லாவின் "அரும் பெரும் சேவைகளைப்" பாராட்டிப் பேசியுள்ளார்.

தேர்தல் முடிந்தது, காங்கிரஸ் வெற்றி பெற்றது. பிர்லாவை அழைத்து வைத்து தங்களுடைய "உற்ற நண்பர், ஆப்த நண்பர்" என்றெல்லாம் போற்றி விருந்து வைக்கிறது. விருந்தில் முதலிடம் வகித்த எஸ். கே. படில் அவர்கள், காங்கிரசின் தேர்தல் பிரசாரத்தின் தலைவராக இருந்தவர் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

யார் இந்த பிர்லா? கோடீசுவரர்; ஆலைகள், பாங்குகள், தொழிலகங்கள் பலவற்றைக் கட்டியாளும் கொழுத்த முதலாளி! அவரிடம் பணம் குவிந்து கிடக்கின்ற காரணத்தால், காங்கிரசின் "உற்ற நண்பராக" இன்று ஆகிவிட்டார்.

ஆகஸ்ட் போராட்டத்தின் போது, இந்த பிர்லா எங்கேயிருந்தார்? ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு உதவியாக இருந்து, யுத்த காண்ட்ராக்டுகளைப் பெற்று, கோடிக்கணக்காகப் பணத்தைச் சம்பாதித்தார்.

சுதந்திர இந்தியாவிலும், அவருடைய "சுதந்திரத்துக்கு" பழுது ஏற்படவில்லை. மாருக, காங்கிரசு அமோகமான ஆதரவை அவருக்குத் தருகிறது, அவரும் அந்த ஆதரவுக்கு நன்றியறிதலாக, "உற்ற நண்பராக, ஆப்த நண்பராக" காங்கிரசுக்கு ஆகிருர்.

பம்பாய் காங்கிரசுக் கட்சி, பிர்லாவுக்கு வைத்த விருந்தைப் பற்றிப் பம்பாய் பத்திரிக்கை ஒன்று "பிர்லாவைப் பெருமைப் படுத்த வைக்கப்பட்ட ஒப்பில்லாத விருந்து" (Unique reception held in honour of Ghanshyamdas Birla) என வர்ணிக்கிறது. ஜி. டி. பிர்லா என்பதன் முழுப் பெயர் கன்ஷியாம் தாஸ் பிர்லா என்பதாகும்.

ஒரு கோலாகலமான விருந்தை வைத்து காங்கிரசு பாராட்டு மளவுக்கு உயர்ந்துள்ள பிர்லா அவர்கள், ஒரு பெரிய முதலாளி. கோடிசுவரர்! கோடிசுவரரென்ருல், வெறும் பெயருக்கு மட்டுமல்ல, உண்மையில் கோடிக் கணக்கில் பணத்தை ஆளும் அதிபர்!

(11-ம் பக்கம் பார்க்க)

"தமிழ் நாடு" இல்லை!

பெற்ற தாயை மறுத்தனர்! பிறந்த பொன்னுட்டை மறந்தனர்!

'தமிழ்நாடு' ஏற்றுக்கொள்ளப்படவில்லை; தமிழர்கள் அவமதிக்கப்பட்டனர்!

சென்னை சட்டசபையில் 'தமிழ்நாடு வேண்டும்' என்பதற்கு 42 பேர்கள் ஆதரவு தந்தனர்.

'தமிழ்நாடு வேண்டும்' என்பதற்கு எதிராக 127 பேர்கள் இருந்தனர்.

'தமிழ்நாடு' கைவிடப்பட்டது. தமிழர்கள் கைவிடப்பட்டனர்!

தமிழர்களை, தமிழை, தமிழ் நாட்டை ஏற்றுக்கொள்ளாதவர்கள் வேறெங்கும் இல்லை, இங்குதான்-தமிழ் நாட்டில்தான் உள்ளனர்! வேறெங்குமிருந்து அவர்கள் இங்கு, வந்துவிடவில்லை. தமிழ் மண்ணில் பிறந்து, தமிழ் வளத்தில் வளர்ந்து, தமிழ்மொழி பேசி, தமிழர்களிடை வாழ்ந்து, இவைகள் மட்டுமல்லாமல் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகச் சட்டசபைக்குச் சென்று வீற்றிருப்பவர்கள்! அவர்களுக்கு மனமில்லை, மனமிருந்தும் 'தமிழ் நாட்டை தமிழ் நாடாக' ஆக்கக்கூடிய மனத்துணிவு இல்லை!

மொழி வழி மாநிலம் அமைந்தபின், அதைத் தமிழ் நாடு என்று அழைக்கப்பட வேண்டுமென தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று கூடிக் கேட்டனர். அதற்காக உத்தமர் சங்கரலிங்கனுர் உயிரைக்கூடத் தந்து கேட்டார். ஆனுல் அதிகார பீடம் அன்று அசைந்து கொடுக்கவில்லை, அதே அதிகாரம் இன்னும் இறுமாப்புடன் அசைந்து கொடுக்காது இருக்கிறது!

ஆட்சி பீடத்தில் இருப்பவர்கள் தமிழ் நாட்டைச்சேர்ந்தவர்கள், 'பச்சைத் தமிழர்கள்' எனப் பட்டம் பல பெற்று தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றவர்கள்- "தமிழர்களேபோல்" இருக்கும் இவர்கள் தமிழ் நாட்டை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர்!

பெற்ற தாயை அவளுக்குற்ற பெயர் கொண்டு அழைக்க, விவாதமேன், தீர்மானமேன், மறுப்பு ஏன்? எதிர் வீட்டுக்காரனின் உத்தரவு இன்னும் வராததால், தாயைத் தாய் என்று கூறமுடியவில்லையா?

சென்னை சட்டசபையில் "தமிழ் நாட்டுக்கு" எதிராக 127 பேர்கள் இருந்தனரென்ருல் — அவ்வாறு "தமிழ்நாட்டுக்கு" எதிர்ப்புத் தந்தவர்களில் எல்லைப் போராட்டத் தளபதி விநயகர் அவர்களும் ஒருவர்- இத்தகைய வேதனை நிரம்பிய அதிசயம் புவியில் வேறெங்கும் நடைபெருது.

தமிழ்நாடே! தாயை மறுக்கும் தனயர்களும் இருக்கின்றனரே, என் செய்வது?

சட்டசபையில் நமது குரல்!

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சட்டசபைக்குச் செல்கின்றனர் என்றதும், "மேடையில் வேண்டுமானால் பேசலாம். ஆனால் சட்ட சபையில் பேசுவதென்றால் சாமான்யமா? அதற்கு அனுபவம் வேண்டும். சட்டம் தெரியவேண்டும். சபையின் ஒழுங்கு தெரியவேண்டும். இவர்கள் போய் சட்டசபையில் என்ன செய்யப் போகிறார்கள்?" சிலர் சந்தேகப்பட்டனர், சிலர் ஆச்சரியப்பட்டனர், மற்றும் சில அவசரசாமிகள் "அண்ணாதுரை பேசுவார், சபாநாயகர் தடுப்பார், குழப்பம் ஏற்படும், வெளியேற்றப்படுவார்கள்!" என அவர்களுடைய ஆவலை ஆருடமாக்கி வெளியிட்டார்கள். மாற்றார்களும், மனமாச்சரியம் கொண்டவர்களும் எதிர்பார்த்ததற்கு மாறாக திராவிட முன்னேற்றக் கழக சட்டசபை அங்கத்தினர்கள். சட்டசபைக்குப் புதியதொருபொலிவைஉண்டாக்கும் விதத்தில் பேசியிருக்கின்றனர். திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் பேசும்பொழுது, சபையினர் மிக உன்னிப்பாக அவர்களையுமறியாமல் சில சமயங்களில் உற்சாகத்துடன் கேட்டார்கள். தமது கருத்துக்களை தெள்ளுதமிழில் மிகத் தெளிவாக, புள்ளி விவர ஆதாரங்களுடன், பண்பட்ட அரசியல் அறிவோடு அவர்கள் எடுத்துரைத்தார்கள். வெளியில் திராவிட முன்னேற்றக் கழகம் எவ்வாறு நல்லதொரு அரசியல் கட்சியாக கருதப்பட்டு வருகிறதோ, அதைப் பிரதிபலிக்கும் விதத்தில் சட்டசபையில் அதன் பணியும் இருந்தது.

யாருக்குத் தெளிவில்லை?

திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி சட்டசபையில் நிதி மந்திரி சுப்பிரமணியம் பேசும்பொழுது அறிஞர் அண்ணா குறுக்கிட்டு விளக்கந் தந்தார்!

மந்திரி:—தி. மு. க. கொள்கையில் தெளிவு இல்லை.

அண்ணா:— எங்களுக்கு தெளிவாக இருக்கிறது.

மந்திரி:—என்னைப் பற்றிச் சொன்னேன். என் கருத்துப்படி அது! எனக்கு அது புரியவில்லை.

அண்ணா:—அதனால் தெளிவில்லை எனப் பொதுப் படையாகக் கூறிவிடக் கூடாது.

கவர்னர் உரையின்மீது பேச அறிஞர் அண்ணா அவர்களுக்கு அரைமணி நேரம் தரப்பட்டது. இரண்டுமணி நேரம் பேசுவதற்கான குறிப்புகளையும், புள்ளி விவரங்களையும் அண்ணா அவர்கள் வைத்திருந்தார்கள். அதிக நேரமில்லாததால், குறிப்பாகச் சிலவற்றைமட்டும் அவர்கள் எடுத்துரைத்தார்கள். அவர் சட்டசபையில் பேசியவற்றில் முக்கியமானவைகளை கீழே தருகிறோம்.

நாடு பிரியவேண்டும் என்று கூறுவதில், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் காங்கிரசுக்கும் அடிப்படை வேற்றுமை இருக்கிறது என்று கூறியது தவிர, நிதிமந்திரி சுப்பிரமணியம் அவர்கள் அண்ணா கூறிய இவைகளில் முக்கியமானவைகளுக்குப் பதில் தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

"பின்பு மக்களிடம் போய் வாக்குகளைப் பெறுவதற்காகவே, இப்படிக் குறை கூறுகிறார்கள்" என்று சிலர் கூறினார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன் — நாங்கள் வாக்குகள் பெற்றது நாட்டுக்குற்ற பெரியதொரு குறையை நீக்க! திராவிடமுன்னேற்றக் கழகத்தினராகிய எங்களை அனுப்பியது, தாய்த்திரு நாட்டை மீட்டிடவேண்டும் என்ற தூய பணிக்கு இவர்கள் தாம் ஏற்றவர்கள் என்ற நம்பிக்கையில்!

* * *

நிலச் சீர்திருத்தம் செய்யப் போகிறோம் என்று அரசாங்கத்தினர் பேசிக்கொண்டே காலந் தாழ்த்துகின்றனர். இதனை மறைப்பதற்கு ஒரு திரையாகவே அவர்கள் வினோபாவை பயன்படுத்துகிறார்கள் என்று நான் அஞ்சுகிறேன். வினோபா அவர்கள் தற்பொழுதைய அரசாங்கத்தினரைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். 'நிலப்பிரபுக்களை மிகுதியாகக்கொண்ட இன்றைய அரசாங்கத்தாரிடமிருந்து நிலச் சீர்திருத்தங்களை நாம் எதிர்பார்க்க முடியாது. நிலச் சீர்திருத்தங்களை அவர்கள் செய்ய முற்பட்டால்கூட, தங்களிடமுள்ள நிலங்களைத் தகுந்தபடி பங்கிடு செய்துகொள்ளவோ, விற்றுவிடவோ அவகாசம் கொடுத்துதான் அவர்கள் சட்டம் கொண்டுவருவார்கள். அந்தச் சட்டம் வெறும் கேலிக் கூத்தாக இருக்கும்! நிலச் சீர்த்திருத்தத்தில் அரசாங்கத்தினருக்கு நம்பிக்கையிருந்தால் உடனடியாகச் சட்டம் கொண்டுவரத் தயங்குவானேன்? யாருக்காக இந்த அரசாங்கம் பயப்படுகிறது?'

* * *

எத்தினமும் எதிர்க்கட்சியினர் ஆளுங்கட்சியாக மாறலாம் என்ற எண்ணம் ஆளுங்கட்சியினருக்கு இருக்கவேண்டும்.

* * *

செஞ்சிக் கோட்டைமீது ஏறியவர்களெல்லாம் தேசிங்கு ராஜாக்கள் அல்ல! அதேபோல் காங்கிரசில் இருப்பவர்கள் எல்லோரும் காங்கிரஸ் தியாகிகள் அல்ல.

* * *

இவர்கள் எல்லாம் ஏகாதிபத்தியதாசர்கள், ஆங்கிலேய அடிவருடிகள் என்று சிலர் பேசினார்கள். அப்பொழுது எங்கள் முகம் சுளிக்கவில்லை. ஆளுங்கட்சியினர் பக்கத்திலிருந்த பலருடைய முகம் சுளித்ததைக் கண்டேன். அங்குதான் அத்தகைய மிட்டாதார்கள் மிராசுதார்கள், சிற்றரசர்கள் இருக்கிறார்கள்!

* * *

ஜமீன்தார்கள், சிற்றரசர்கள் காலம் வேகமாக ஓடி மறைந்து கொண்டிருக்கும் இந்த நாளில் அரசியலில் ஜமீன்தாரி முறையைகையாள விரும்பினால் சீக்கிரமே அதற்கும் முடிவு கட்டப்படும் என்பதை எச்சரிக்க விரும்புகிறேன்.

* * *

'மாநில சர்க்கார் மத்தியசர்க்காரின் பாவாடை நாடாவில் கட்டப் பட்டிருப்பதாக' முன்னாள் மந்திரி ரோச்விக்டோரியா குறிப்பிட்டார். அந்தப் பிணைப்பு அறுபட வேண்டுமென்றுதான் நாங்கள் கூறுகிறோம்.

* * *

'வடக்கு வளருகிறது தெற்கு தேய்கிறது' என்று கூறுவது வெறும் அடுக்குச் சொல் அலங்காரமல்ல! அடுக்குச்சொல் அலங்காரத்தினாலே அவர்கள் எத்தனை திறமைசாலிகளாயிருந்தாலும் மக்களை ஏமாற்றி 'தெனனாடு தேய்கிறது!' என்ற கிளர்ச்சியை ஏற்படுத்திவிடமுடியாது.

* * *

'உங்களுக்குப் பேச்சுரிமை கொடுத்ததனால்' அல்லவா இப்படிப் பேசுகிறீர்கள் என்று, சிலர் எங்களைக் கேட்கிறார்கள். இதேபோலத்தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் அன்று தேம்ஸ் நதிக்கரையிலிருந்து சொன்னார்கள், அதையே இவர்கள் இன்று கூவம் நதிக்கரையிலிருந்து கூறுகின்றனர்.

தோழர் மு. கருணாநிதி

"இடிப்பாரை யில்லாத ஏமரா மன்னன், கெடுப்பா ரிலானும் கெடும்" என்பது குறள். இடித்துரைக்கின்ற பெரியவர்களை அரசாங்கம் துணையாகக் கொள்ளவேண்டும்.

நியாய வாரச் சட்டங்களிலுள்ள குறைபாடுகளால், இன்று விவசாயிகள் பெருந் தொல்லைகளுக்கும் இன்னல்களுக்கும் ஆளாகியுள்ளனர்.

விவசாயப் பெருமக்கள் முத்து முத்தாய்ச் சிந்திய வியர்வையால், மணி மணியாய்க் குவிந்த நெல்மணிகள் இன்று களத்து மேட்டில் காவலாளிகளின் மேற்பார்வையிலிருக்கின்றன. இந்தப் பெருமக்களின் வயிற்றிலோ பசிப் புயல் குமுறிக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு சர்க்கார் எந்தவகையில் வாழ்வளிக்கப் போகிறார்கள்?

* * *

தோழர் ப. உ. சண்முகம்

எதிர்க் கட்சியினர் மட்டும் தான் குறை சொல்லுகிறார்கள் என்று கருத வேண்டாம். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் கூட பலர் கவர்னர் உரையைப் பாராட்டுவதாகக் கூறிவிட்டு பின்னர் குறைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பாராட்டுவதைவிட குறை கூறுவதற்கு அதில் அதிகம் இருப்பதுதான் காரணம்.

தமிழ் ஆட்சி மொழியாக அமுல் நடத்துவதற்கு பரிசீலனைசெய்ய குழு அமைக்கப் பட்டிருக்கிறது. தாய்மொழியை உபயோகிக்கத் தயக்கமேன்? விரைவில் தமிழை அரசியல் மொழியாக ஆக்கவேண்டும்.

* * *

தோழியர் சத்தியவாணிமுத்து

என்றுமே வடநாடு செல்வதற்கு வகையற்ற தமிழ்நாட்டின் சின்னஞ் சிறு குழந்தைகளும் இந்தி கற்றுக்கொள்ள வேண்டும் என்று கட்டாயப் படுத்தப்படும்பொழுது தமிழ் நாட்டில் வந்துள்ள கவர்னர் தமிழ்மொழியில்தான் பேச வேண்டுமெனக் கட்டாயப் படுத்தப்படாதது ஏன்?

நயாபைசா என்ற இந்திச் சொல்லை ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும்? புதிய காசு என்று தமிழில் சொல்ல ஏன் வெட்கப் படவேண்டும்?

கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் விளைச்சல் அதிகரித்திருப்பதாகக் கூறுகிறார்கள்; விளைச்சல் அதிகரித்திருந்தும் விலைவாசிகள் இறங்கவில்லை. இது எப்படி என்பது நமக்குப் புரியவில்லை.

இந்த நாடு மத்திய ஆட்சியின் பிடியிலிருந்து விடுபட வேண்டுமென்று கூறுகிறோம்.

மன்றம்

ஞாயிறு 12—5—57 சென்னை

யாழின் சோகம்!

இலங்கைவாழ் தமிழர்கள் பலவித இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். அமைதியும் தென்றலும் தவழ்ந்த அவர்கள் வாழ்வில், தனிச்சிங்களவெறி என்ற புயல் புகுந்து, அலங்கோலத்தைப் பரப்பியுள்ளது. மக்கள் தொகையில் குறைந்த எண்ணிக்கையுடையவர்களாயிருக்கின்ற காரணத்தால், அவர்கள் தவிக்கின்றனர். வெந்த உள்ளத்துடன், நொந்த வாழ்வுடன், ஆற்றுவாரும் தேற்றுவாருமின்றி அல்லற்படுகின்றனர்.

இலங்கைவாழ் தமிழர்கள் பன்னெடுங்காலமாக அந்த இடத்தைத் தாயகமாகக்கொண்டு வாழ்பவர்கள். அந்த நாட்டில் வளங்குவிய, வாழ்வு உயரப் பாடுபட்டவர்கள் தமிழர்கள். அவர்களுடைய உழைப்பால், இருண்ட காடுகளிடை விளைநிலங்கள் உண்டாயின, சதுப்பு நிலங்கள் சலியாத வருவாயைத் தரும் தோட்டங்களாக மாற்றப்பட்டன. அவர்கள் பாய்ச்சிய வியர்வையால், மலைச்சரிவில் தேயிலைத் தோட்டங்கள் படர்ந்தன; மணற்பரப்பில் தென்னைமரங்கள் வளர்ந்தன; சதுப்பு நிலங்களில் ரப்பர் காடுகள் உண்டாயின. இலங்கை வளமான நாடாக ஆவதற்குப் பெரிய துணையாக இருந்தவர்கள் அந்த நாட்டுத் தமிழர்கள் என்பதை எவரும் மறுக்கமுடியாது. இன்று, அந்த வளத்தைத்தந்த தமிழர்களுக்கு வாழ்வு மறுக்கப்படுகிறது-அங்கு வாழும் உரிமை மறுக்கப்படுகிறது.

பன்னெடுங்காலமாக, தலைமுறை தலைமுறையாக அந்த நாட்டில் வாழ்பவர்கள்-அந்த நாடு வளம்பெற உழைத்தவர்கள்-அந்த நாட்டின் வாழ்வு தாழ்வு இரண்டிலும் ஒன்றி அதைத் தாயகமாகக்கொண்டு இருப்பவர்கள் - மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதியினராக உள்ளவர்கள் - அத்தகையவர்கள் இன்று இலங்கையில் உரிமையுடன் வாழமுடியாது அவதியுறுகின்றனர், அவர்கள் தமிழ் பேசுகின்ற காரணத்தால்-தமிழர்தம் பழக்க வழக்கங்களை, பண்பாட்டை பின்பற்றி வாழுகின்ற காரணத்தால்!

இலங்கையிலுள்ள தமிழர்களுக்குக் குடியுரிமை வழங்குவதற்கான பிரச்சினை நீண்ட காலமாக முடிவடையாமல் இருந்து வருகிறது. 1948ல் தொடங்கி அனுப்பப்பட்ட குடியுரிமை மனுக்களில், மொத்தம் 'ஆறுலட்சம் பேர்களுக்கு மேல்' குடியுரிமை கேட்டதில் இதுவரை ஐம்பதினாயிரம்பேர்கள் மட்டுமே இலங்கையில் வாழ அனுமதிக்கப்பட்டுள்ளனர். பாக்கியிருக்கும் ஐந்தரை லட்சம் பேர்களின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டன! பத்திரிக்கைச் செய்திகளின்படி ஆகஸ்டு திங்களுக்குள், ஆறரைலட்சம் பேர்கள் இலங்கையில் "நாடற்றவர்களாக" ஆக்கப்படலாம் எனத் தெரிகிறது.

இலங்கையிலுள்ள தமிழர்களுக்கும் மற்றுமுள்ள இந்தியர்களுக்கும் நீதி கேட்க வேண்டுமென்று இந்திய அரசாங்கத்தைப் பல தடவை நமது கழகம் வேண்டியுள்ளது. இந்திய அரசாங்கம் உறுதியான முறையில் தலையிட்டால் நல்லதொரு முடிவு காணமுடியும் என நம்பினோம். ஆனால் தமிழர்களின் குறைபாடுகள் டில்லி ஆதிபத்தியத்தால் கவனிக்கப்படாது போயிற்று.

தமிழர்கள் தரும் கோரிக்கைகள் மிக நியாயமானவை. இந்நாள் வரை தாங்கள் வாழ்ந்த விதத்தில் தொடர்ந்து வாழ, தங்களின் உழைப்புக்கு மதிப்புத்தர, தங்களின் மொழியும் பண்பாடும் சீர்குலையாது பாதுகாக்கப்பட, அவர்கள் சில பாதுகாப்புகளைக் கேட்கின்றனர். இப்பொழு குடியுரிமை மறுக்கப்படுபவர்களில் பெரும்பாலோ உழைப்பைத்தந்து அங்கு வாழ்பவர்கள்; உல்லாசத்தி காக அங்கு இருப்பவர்களல்ல. சுய உழைப்பை நம் இருக்கும் தொழிலாளர்கள், சுரண்டும் நோக்கமுடையவ ளல்ல. மனிதாபிமானம் உடைய எவரும் அவர்களுடை குடியுரிமையைப் பறிக்க விரும்பார்!

இலங்கைக்கு அண்மையில் இந்தியக் குடியரசி பிரதமர் பண்டித நேரு செல்லவிருக்கிறார். அவர் வருவ தெரிந்து இலங்கைத் தமிழர்கள் மிகவும் எதிர்பார்த்து இருக்கின்றனர், "மகாத்மா தேடித்தந்த மனித குல மாணிக்கமான நேருஜி, ஈழமணித் திருநாட்டுக்கு வ போகிறார்!" "ஆசியா நாடுகளின் மணி விளக்கான நே மகான் வரப்போகிறார்!" என்றெல்லாம் ஆவலும் அன் ஒரு சேர பண்டித நேருவின் வருகையைக் குறித்து உ பூரிக்கின்றனர். நீண்டகாலமாகத் தீர்க்கப்படாதிருக் இலங்கைக் குடியுரிமைப் பிரச்சினையாவது இந்தி இலங்கைப் பிரதமர்கள் நேரில் பேசும்பொழுது தீர்க் படமாட்டாதா என எதிர்பார்க்கின்றனர்.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசி வலிவு பண்டித நேருவிடம் இருக்கிறது. உலக அரங் இதைவிடக் கடினமான சிக்கல்களுக்கு பண்டித நே யோசனைகள் சொல்லி, அமைதிகாண முயன்றிருக்கின்ற அதிலும் இது இந்தியரைப்பற்றிய பிரச்சினை, அ லுள்ள - காமன்வெல்த்திலுள்ள - ஆசிய நாடுக ஒன்றான - தோழமையுள்ள இலங்கையுடன் பேசி மு காணவேண்டிய பிரச்சினை. பண்டிதநேரு மனம் வைத்த இதில் நிச்சயமாக முடிவு காணமுடியும். செல்லுகின் ஒரு நல்ல சமயத்தில் தான். உலகத்திற்கெல்லாம் அ தியை-அன்பைப் போதித்த புத்தரின் 2500 ஆண்டு வி வுக்கு அவர் போகிறார். சிங்களர்-தமிழர்களிடை வ வேண்டிய அமைதி குறித்து பண்டாரநாயக்காவிடம் பே அன்பு நெறியில் அவர் மனத்தைத் திருப்பி, குடியுரிமை வாங்கித்தரமுடியும். இவற்றை நினைக்கும் பொழுது இ கைத் தமிழர்களுக்கு நல்ல நம்பிக்கை உண்டாகிறது.

ஆனால் இது தமிழர் பற்றிய பிரச்சினையாயிற் தமிழர்கள் என்றாலே நேரு பண்டிதர் அலட்சிய யிருப்பாரே? என்ற கவலை உண்டானது. அதற்கேற் போல, இந்தியாவிலுள்ள இலங்கைப்பிரதிநிதி சர். எட்வ விசயரத்னே அவர்கள், "இலங்கையிலுள்ள இந்தியர் யுரிமைபற்றி விவாதிக்க அவர்களுக்கு நேரமிருக்கா எனக் கூறியுள்ளார். ஆனால் இந்திய அரசாங்கத்தின் பாக, அதை உறுதிப் படுத்தி அறிக்கை எதுவும் வில்லை.

இன்னுங் காலங் கடந்துபோகவில்லை. நீண்ட கால தீர்க்கப்படாமல் இருக்கும் இலங்கை வாழ் தமிழர்க குடியுரிமை பற்றி நல்லதொரு முடிவு காண பண்டித அவர்கள் முயலவேண்டும். அங்கே வாழ்வு, இல்லையா அகதிகளாக விரட்டப்படுதல் என்ற அவல நிலையில் இ சக்கணக்கான தமிழர்கள் நிற்கின்றனர். இந்தியா பிரமதர் என்ற முறையில் பண்டித நேரு ஆற்றவேண் பொறுப்புகளில் ஒன்று, இலங்கைத் தமிழர்களுக்குக் யுரிமை வாங்கித் தருவது. அதை அவர் ஆற்றுவாராக!

யாழ் இனிது என்பார்கள். ஆனால் யாழ்ப்பாண விருந்து-ஈழநாட்டிலிருந்துவரும் யாழிசையில் சோகம் க யுள்ளது. அதை மாற்றி மீண்டும் இனிமை பயக்க பண் நேரு-பண்டாரநாயக்கா அவர்களின் சந்திப்பு ப படட்டும்!

மன்றம் வார இதழின் சந்தா விபரம்

உள்நாடு (இலங்கையும் சேர்த்து)

இரண்டாண்டு	....	ரூ.	15·00
ஓராண்டு	....	ரூ.	8·00
ஆறுமாதம்	....	ரூ.	4·00
தனி இதழ்	....		16 காசு

இலங்கை சந்தாதாரர்களுக்கு வி. பி. பியில் தனிச் செலவு 75 கா

வெளிநாடு (மலேயா-பர்மா)

இரண்டாண்டு	....	ரூ.	18·75
ஓராண்டு	....	ரூ.	10·00

(ஓராண்டிற்கு குறைந்த சந்தா இல்லை)

தனி இதழ்	....	20 காசு.

Best copy available

வினா: திராவிட முன்னேற்றக் கழகம் பார்ப்பனர்க்கு அடிமையாகி விட்டதாகத் திராவிடக் கழகத்தார் செப்புகின்றனரே அது பற்றிய கருத்து என்ன?

விளக்கம்: திராவிட முன்னேற்றக் கழகம் பார்ப்பனீயத்தைத் தான் வெறுக்கிறதேயல்லாமல், தனிப்பட்ட பார்ப்பனர்களை, அவர்கள் பார்ப்பன வகுப்பில் பிறந்து விட்டார்களே என்பதற்காக, வெறுப்பதில்லை என்பதைப் பல ஆண்டுகளாக எடுத்தியம்பி வருகிறது. இதே கருத்தைத் தான் திராவிடக் கழகத் தலைவர் பெரியார் இராமசாமி அவர்கள் மூன்று ஆண்டு காலத்திற்கு முன்னால், சென்னை இலட்சுமிபுரம் இளைஞர் சங்கத்தில் பேசும் போது திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்கள் என்பதையும் நாம் அடிக்கடி எடுத்துக் காட்டி வந்திருக்கிறோம்.

தி. மு. கழகத்தில் பார்ப்பனர்கள் இல்லை, ஆனால் பார்ப்பனர்களாக இருந்தவர்கள் இருக்கிறார்கள். பார்ப்பன வகுப்பிலே பிறந்து, தம்முடைய பார்ப்பனீயக் கொள்கையை அறவே விட்டு, சமத்துவ சமரசப் பகுத்தறிவு நெறியினராக மாறித், திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல்-பொருளாதாரச் - சமூகக் கொள்கைகளை முழுமனதோடு ஏற்றுக்கொண்ட ஆயிரக்கணக்கானவர்கள் முன்னேற்றக் கழகத்தில் இன்று உறுப்பினராகியுள்ளனர்.

பார்ப்பனர்கள் பார்ப்பனீயக் கொள்கைகளை விடாப்பிடியாகக் கடைப்பிடிப்பது தான் குற்றமேயொழிய, அவர்கள் பார்ப்பனர்களாகப் பிறந்துவிட்டது அவர்கள் குற்றமல்ல. முதலியார், செட்டியார், நாய்க்கர், நாடார், பள்ளர், பறையர் போன்ற பல்வேறு வகுப்புக்களில் பிறந்து விட்டவர்கள் தத்தம் வகுப்பின் தனிக்கொள்கைகளை விட்டுவிட்டுப் பகுத்தறிவு நெறியினராக மாறினால், அவர்களை ஏற்றுக் கொள்வதில் முன்னேற்றக் கழகம் எப்படித் தயக்கங்காட்டுவதில்லையோ அப்படியே பகுத்தறிவு நெறியினராக மாறும் பார்ப்பனவகுப்பில் பிறந்து விட்ட பண்பாளர்களையும் ஏற்றுக் கொள்வதில் முன்னேற்றக் கழகம் தயக்கங் காட்டுவதில்லை.

தன்னைத் தனி - உயர்ந்த வகுப்பாகக் கருதிக்கொள்வது, தன்னைத் தனி உயர்ந்த சலுகைகளோடு ஆண்டவன் பிறப்பித்ததாக எண்ணிக் கொள்வது, வடமொழி ஆண்டவன் மொழி என்றும் அந்த மொழி தனக்கே உரித்தான மொழி ஒன்றும் மற்ற வகுப்பினர் அந்த மொழியைப் படித்தாலோ அல்லது கேட்டாலோ பாபம் என்றும் கொள்வது, வடமொழி வேதங்களையும் புராண இதிகாச சாத்திரங்களையும் மட்டுமே தனக்கு வழிகாட்டிகளாகக்கொண்டு அவற்றிலுள்ள கட்டுக்கதைகள், மூடப் பழக்க வழக்கங்கள், குருட்டு நம்பிக்கைகள் ஆகியவற்றை அப்படியே ஏற்றுக்கொண்டு பரப்புவது, தன் வகுப்புக்குரிய தனிச் சின்னங்கள் தனிச் சடங்குகள் தனிக் கட்டுப்பாடுகள் என்று சொல்லிக்கொண்டு அவற்றையெல்லாம் மேற்கொள்வது, பிறவகுப்பினரைத் தாழ்த்தப்பட்டவர்களாக- பிற்படுத்தப்பட்டவர்களாகத்- தள்ளி வைக்கப்பட்டவர்களாகத்-தீண்டப்படாதவர்களாக- இழிமக்களாக-ஏவலாளராகச் - சண்டாளர்களாகச் - சூத்திரர்களாகப்-பாபிகளாகத் - தரம் குறைந்தவர்களாகக் கருதுவது, கங்கை வெளியாகிய ஆரியவர்த்தமே தனக்குப் பூர்வீகமான இடம் என்று எண்ணுவது, புரோகிதத் தொழிலும் அர்ச்சகத் தொழிலும் தன் வகுப்புக்குரிய தனித் தொழில்களாகவே கருதுவது போன்ற இன்ன பிறவெல்லாமும்தாம் பார்ப்பனீயத்தின் தன்மைகளாகக் கொள்ளப்படுகின்றன. இந்தப்பார்ப்பனீயம் பார்ப்பனரிடத்தில் மட்டு மல்லாமல், பார்ப்பனரல்லாத முதலியார், செட்டியார், நாயுடு, நாடார் போன்ற பல்வேறு வகுப்பினரிடத்தும் காணப்படவே செய்கின்றன, துருவிப் பார்த்தால் பார்ப்பனீயம் பார்ப்பனரிடத்தில் மிகவாகக்காணப்படலாம், பார்ப்பனரல்லதே வகுப்பாரிடத்தில் சற்று குறைவாகக் காணப்படலாம். பார்ப்பனரல்லாதாரிடத்திலுள்ள பார்ப்பனீயத்தைப் போக்க வேண்டும் என்பதிலே எவ்வளவு அக்கரையும் முயற்சியும் எடுத்துக் கொள்கிறோமோ, அவற்றை விடச் சற்று மிகவான அக்கரையும், முயற்சியும் பார்ப்பனரிடத்திலுள்ள பார்ப்பனீயத்தைப் போக்குவதிலும் எடுத்துக்கொள்கிறோம். பார்ப்பனீயத்தை ஒதுக்கித் தள்ளிய பார்ப்பனரல்லாதாரை எப்படிக் கழகத்தின் உறுப்பினர்களாக ஏற்றுக்கொள்கிறோமோ, அப்படியே பார்ப்பனீயத்தை ஒதுக்கித் தள்ளிய பார்ப்பனரையும் ஏற்றுக்கொள்கிறோம். இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் தூய நேர்மை நெறிக்கு எடுத்துக் காட்டு ஆகுமே ஒழிய, பார்ப்பனர்க்கு அடிமை போன நிலைக்கு அறிகுறி ஆகாது.

உள்ளபடியே திராவிடக் கழகத்தார், பார்ப்பனர்க்கு அடிமையானவர்கள் அவர்கள் கருத்துப்படி என்று கூறினால், அது மிகையாகாது. பார்ப்பனரைக் குத்துவோம் வெட்டுவோம் துரத்தியடிப்போம், வெளியேற்றுவோம், அவர்கள் வீட்டிற்குத் தீவைப்போம் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கும் திராவிடக்கழகத்தார் தாம் தேர்தல் காலத்தில் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், டாக்டர் சீனிவாச அய்யர், சம்பத் அய்யங்கார் பட்டுக்கோட்டை சீனிவாச அய்யர், சங்கரஅய்யர் போன்ற பார்ப்பனர்கள் பின்னால் ஓடி ஓடித் தேர்தல் பணி செய்ததார்கள். இதுபோன்ற சொல்லுக்கும் செயலுக்கும் முரண்பாடு ஏற்படும் இழிசெயலைத் திராவிட முன்னேற்றக்கழகத்தார் செய்ததில்லை.

திராவிடக்கழகத்தாரின் கருத்துப்படி விரட்டியடிக்கப்பட வேண்டியவர்களின் பின்னால், அவர்களே புகழ்பாடிச் செல்லுகிறார்கள்என்றால், இது தான் அடிமையாகிவிட்டதன் அறிகுறியாகுமே தவிர திராவிட முன்னேற்றக்கழகத்தார் மேற்கொள்ளும் சீரிய நெறியாகாது. காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளாகத்தெரியும் என்பார்களே அதுபோல அடிமைபோன திராவிடக்கழகத்தார்க்கு எதிர்படுபவர்களெல்லாம் அடிமைகளாகத் தெரிகிறார்கள் போலும்!

—இரா. நெ.

இந்தியாவின் உணவு நிலைமை

★

ஐந்தாண்டுத் திட்டங்களில் உணவு உற்பத்திக்கு முதலிடம் தரப்பட்டதாகக் கூறப்பட்டது. காங்கிரசு அரசாங்கத்தின் அரும் பெரும் சாதனைகளை வர்ணிப்பவர்கள், இந்தியாவின் உணவு நிலைமை எதிர்பார்த்ததைவிட உயர்ந்து, பற்றுக்குறை நிலை போய், அயல் நாட்டாரிடம் எதிர்பார்த்த நிலை போய், வெளிநாடுகளுக்கு அனுப்பும் நிலையில் இந்தியா இருப்பதாகக் கூறுகிறார்கள். அத்தகைய வளமான நிலைபிறந்தால் நல்லது தான்! ஆனால் உண்மையான நிலை-இந்திய அரசாங்கத்தினர் தரும் தகவல்படி பார்த்தால், இந்திய உபகண்டத்தின் உணவுநிலை-மோசமாகிக்கொண்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் இந்தியாவில் உற்பத்தியாகும் உணவுத் தானியங்களின் அளவு குறைந்துவருகிறது; அதனால் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய நாம் கொடுக்கும் பணம் அதிகரிக்கிறது.

இந்தியாவில் உற்பத்தியான உணவுத் தானியங்கள் :—

1953—54ல்	**6 கோடி 88 லட்சம் டன்**
1954—55ல்	**6 கோடி 65 லட்சம் டன்**
1955—56ல்	**6 கோடி 34 லட்சம் டன்**

1953-54ல் இருந்ததைவிட 1954-55ல் 23 லட்சம் டன் உணவு தானியங்கள் குறைந்து விளைவு வந்தது; 1955-56ல் 54 லட்சம் டன் குறைந்துவிட்டது.

உணவுக்குறைப்பாட்டை நீக்க, வெளிநாடுகளிலிருந்து உணவுத் தானியங்களை நாம் இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது. அவ்வாறு இறக்குமதி செய்வதற்காக, நாம் அவர்களுக்கு, ஏராளமான பணத்தைக் கொட்டித் தந்திருக்கிறோம்.

உணவுப் பொருள்களை வாங்க, வெளிநாடுகளுக்கு இந்திய அரசாங்கம் செலுத்திய பணம் :

1953—54ல்	**47 கோடி ரூபாய்.**
1954—55ல்	**33 கோடி 10 லட்சம் ரூபாய்.**
1955—56ல்	**56 கோடி ரூபாய்.**

இந்த நிலையில் இந்தியாவின் உணவு உற்பத்தி மிகத் திருப்திகரமாகி விட்டது என்று சொல்லமுடியுமா?

பஞ்சமில்லா நாடு!

[illegible]

தேர்தல் காலத்தில் திராவிட முன்னேற்றக்கழகம் வழங்கிய துண்டு வெளியீடு ஒன்றில் இந்த வாசகம் வந்திருந்தது. வீடுகளில் பட்டினி இல்லாதொழிய வேண்டும், நாட்டில் பஞ்சம் நீங்கி வளமை பெருக வேண்டும் என்பது தான் ஒரு நல்ல அரசாங்கத்தின் குறிக்கோளாகவும் அமையும்.

உண்ண உணவு, உடுக்க உடை இருக்க இடம் ஆகிய இந்த மூன்றும், மனித வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளாகும். இந்தத் தேவைகளுக்கு மேல், உடலுக்கு ஓய்வு, உள்ளத்திற்கு உல்லாசம், மகிழ்ச்சி முதலியன தேவைப்படுகின்றன. உணவு, உடை, இருக்கை, ஓய்வு, உல்லாசம், இவை மனித வாழ்க்கையில் முக்கிய தேவைகளெனச் சொல்லலாம். குறிப்பிட்ட முறையில் அவைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்தத் தேவைகள் எந்த அளவுக்கு ஒரு தனிப்பட்ட மனிதனுக்குக் கிடைக்கிறதோ அந்த அளவுக்கு அவனுடைய வாழ்வில்மகிழ்ச்சி சேர்கிறது, இன்பம் குடிகொள்கிறது. இந்தத் தேவைகள் எந்தஅளவுக்கு ஒரு நாட்டில் அதிகமான மக்களுக்குக் கிடைக்கிறதோ அந்த அளவுக்கு அந்த நாடு மகிழ்ச்சியான நாடாகிறது. குடிமக்களின் வாழ்வில் குதுகலம் நிலவினால், அந்த நாடு "நல்ல நாடு" ஆகிறது.

வாழ்க்கைப் போராட்டம்

மனித வாழ்க்கையில் மிக அவசியமாக இருப்பது உணவு. உணவைச் சம்பாதிப்பது தான் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் முதல் போராட்டமாக இருக்கிறது. மனித குலவரலாற்றிலும், உணவைப் பெறுவது ஒரு முக்கியமான போராட்டமாகும்.

உணவையும், தமக்குத் தேவையாகும் வாழ்க்கை வசதிகளையும் பெறுவதற்கு, மனிதர்கள் முதலில் தனிப்பட்ட முறையிலும், பின்பு கூட்டங்கூட்டமாகவும், அவைகளே சிறிய நாடுகளாகவும், கடைசியில் பெரிய அரசுகளாகவும் மாறி, போராடியிருக்கின்றன. தோல்விகண்ட நாடுகள் பஞ்சத்தின் கீழ் சிக்கியிருக்கின்றன, அடிமைப்பட்ட குடும்பங்கள் பட்டினியால் மாண்டிருக்கின்றன. தோல்வியடைந்த நாட்டிலிருக்கும் உணவையும், உடையையும், இருப்பதற்கான வசதி மிக்க இடங்களையும், அடிமைப்பட்டோரின் உழைப்பையும் வெற்றிகண்டோர் எடுத்துச் சென்றுள்ளனர்.

உணவைப் பெறுவதற்கு மனிதன் மிருகத்துடன் போராடியிருக்கிறான்.

உணவைப் பெறுவதற்கு மனிதன் செடிகளுடன் போராடியிருக்கிறான்.

உணவைப் பெறுவதற்கு மனிதன் இயற்கையுடன் போராடியிருக்கிறான்.

உணவைப் பெறுவதற்கு மனிதன்மனிதனுடன் போராடியிருக்கிறான்.

இந்த வாழ்க்கைப் போராட்டங்கள் இன்னும் தீர்ந்தபாடில்லை. ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு கட்டத்தில், ஓரளவுக்கு வெற்றிபெற்றிருக்கின்றன. ஆப்பிரிக்கா கண்டத்தில் அடர்ந்த காடுகளில் இருப்பவன் மிருகங்களுடன் போராடிப் போராடி தனக்கு வேண்டிய அன்றாட உணவைப் பெறுகிறான். அவன் வெற்றிபெற்றால், மிருகம் அவனுக்கு உணவாகிறது. தோல்வியுற்றால் மிருகத்துக்கு அவன் உணவாகி விடுகிறான். காடு மேடுகளை அகற்றி, கள்ளிகாளான்களை அழித்து, பண்படுத்திய நிலத்தில் பயிர்த்தொழில் செய்து உணவைப் பெறுகிறான். வெய்யல் அதிகமானாலும் மழை அதிகரித்தாலும், வெள்ளமும் புயலும் வந்தால், பயிரைப் பாதுகாத்து இயற்கையை எதிர்த்து நின்று உணவைப்பெற வேண்டியிருக்கிறது. சதுப்பு நிலம், பாலைவனம், பனிக்கட்டி இவைகளைச் சிறுகச்சிறுக அகற்றி விளைநிலங்களைப் பெருக்கி, உணவை அதிகமாக்க வேண்டியிருக்கிறது.

மனிதன் தன்னினத்துக்கு அப்பாற்பட்ட இயற்கையுடன் போராடி உணவைப் பெறுகிறான்.

அடுத்தபடியாகபெற்ற உணவைக் காப்பாற்ற, மனிதன் மற்றொரு மனிதனுடன் போராட வேண்டியிருக்கிறது. ஒருவனை மற்றொருவன் அடிமை கொள்வது, ஒரு நாட்டை மற்றொரு நாடு ஆட்சி செய்வது உண்டாயின. இவற்றால் அடிமைப்பட்ட நாட்டில் வாழ்க்கை வசதிகள் மிகவாக இருந்தாலும், அவை ஆட்சி செலுத்தும் ஆதிபத்தியத்தால் கைப்பற்றப்படுகின்றன. நாட்டில் பஞ்சம் சூழ்கிறது, வீடுகளில் பட்டினி நுழைகிறது.

ஏழ்மை பட்டினியைத் தருகிறது. பட்டினி நோய் நொடிகளை அதிகரிக்கிறது, நோய் உடலை வலிவற்றதாக்குகிறது, உடல் வலிவிழந்தால், உழைக்கும் ஆற்றல் குறைகிறது, உழைக்கும் ஆற்றல் குறைந்ததும் ஊதியம் குறைகிறது, ஊதியம் குறைந்தால் ஏழ்மை இன்னும் அதிகமாகிறது. ஏழ்மை அதன் தொடரில் பட்டினி, நோய், என்று அதிகமாக்குகிறது. அவ்வாறு வளையத்தில் சுற்றி வருவதைப் போல, ஏழ்மையால் பட்டினி உண்டாகிறது, பட்டினியால் ஏழ்மை வளர்கிறது.

ஒரு நாடு நல்ல நாடு என்றால், அந்த நாட்டில் இருக்கிற அரசாங்கம் ஒரு நல்ல அரசாங்கம் என்றால், அந்த நாட்டில் பட்டினி என்பது முதலாவதாக ஒழிக்கப்பட வேண்டும்.

பட்டினியை எதிர்த்து...

பட்டினியை ஒழிக்க தொடுக்கப்படும் போராட்டம் தான் முதலாவதான, முக்கியமானதான போராட்டமாகும். இந்த அடிப்படைத் திட்டத்தை எவரும் மறுப்பது கிடையாது. அந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஒவ்வொருவரும் வகுத்திடும் வழிகள் கையாளும் முறைகள் மாறுபடுகின்றன.

பட்டினி ஒழிக்கப்பட வேண்டியதுதான்! இதைஅமெரிக்காவும் ஒப்புக்கொள்கிறது, ருஷியாவும் ஒப்புக்கொள்கிறது, செர்மனியும் சொல்கிறது இங்கிலாந்தும் சொல்கிறது. பிரான்சும் இத்தாலியும் போர்ச்சுகலும் டென்மார்க்கும் அவ்வாறே சொல்கின்றன. ஆப்பிரிக்காவும், ஆஸ்திரேலியாவும், அதற்காகப் பாடுபடுகின்றன. சீனநாடு பட்டினியை விரட்டிட பலவகைத் திட்டங்களை நிறைவேற்றுகிறது, இந்திய அரசாங்கம் பல திட்டங்களைப் போட்டபடி இருக்கிறது. இந்தியாவுற்குள்ளேயே தென்னாட்டிற்கு காங்கிரசு ஒரு வகைத் திட்டங்களை முன்வைக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகத்தினராகிய நாம் வேறு பல திட்டங்கள் வேண்டுமெனக் கேட்கிறோம். கண்டத்துக்கு கண்டம், நாட்டுக்கு நாடு பட்டினியை ஒழிக்கத் திட்டங்கள் போடப்படுகின்றன. சில பலன் தருகின்றன, பல முடிவின்றி விடப்படுகின்றன.

பட்டினியை ஒழிப்பதற்கான திட்டம் எந்த அடிப்படையில் இருந்தபோதிலும், பட்டினி ஒழிக்கப்பட வேண்டியது என்பதில் எவருக்கும் வேறுபாடு இருக்கமுடியாது. பட்டினிக் கொடுமையிலிருந்து மனித குலம் விடுவிக்கப்பட வேண்டியதற்கான திட்டங்கள் முதலிடம் பெறும்.

இப்பொழுதுள்ள நிலையில், உலகிலுள்ள எல்லா மக்களுக்கும் வேண்டிய அளவு உணவு உற்பத்தியாக வில்லை. உற்பத்தியாகும் உணவுப் பொருள்களையெல்லாம் ஒருபக்கத்திலும், அந்த உணவை உண்டு உயிர் வாழவேண்டிய மக்களையெல்லாம் மற்றொரு பக்கத்திலும் வைத்து, உணவைப் பங்கிட்டுக் கொடுக்க ஆரம்பித்தால், பாதிப் பேர்களுக்குத்தான் முழுவயிறு உணவு கிடைக்கும். அல்லது எல்லோ

ருக்கும் சமமாகப் பங்கி
அரைவயிறு உணவும்,
வயிறு பட்டினியுமாகக்
வேண்டும். இதுதான்
றுள்ள உணவு உற்பத்
நிலை! ஆக எல்லோருக்கு
தனெனப் பிறந்த ஒவ்
வருக்கும் வயிரார
வேண்டுமென்றால், இப்
துள்ள உணவு உற்பத்தி
டிப்பாக வேண்டும்.

உணவு உற்பத்தி
பெருக்கும் பொழுது,
பொழுதுள்ள மக்கள் எண்
கையை மட்டும் கணக்
பார்த்தால் போதாது.
வுப் பொருள்கள் அதிக
வேகத்தைவிடப் பல ம
வேகத்தில் மக்கள் தெ
வளர்ந்து கொண்டு போகி
ஒவ்வொரு நாளும், ஒவ்
மணிநேரமும் பல்லாயிரக்
கான குழந்தைகள் பி
வண்ணமிருக்கின்றன. இ
வீதத்தைவிட மிஞ்சும
பிறப்பு வீதம் இருக்கிறது
டத்தில் இப்பொழுது ம
எண்ணிக்கை பத்து
என்றால் ஆண்டு ஒன்
பதினைந்து லட்சம் பே
அதிகமாகிக் கொண்
போகின்றனர். ஆக உ
உற்பத்தி—வளருகிற ம
எண்ணிக்கையையும் கவ
தில் வைத்து செய்ய
வேண்டும். குடும்பக்கட்டுப்
போன்ற முறைகளால் ம
எண்ணிக்கை ஓரளவு க
படுத்தப்படுகிற தென்று
மக்கள் தொகை உயரு
அது உடனடியாகத் தடு
விடாது. மக்கள் எண்ணி
எதிர்பார்த்து உணவுத்
டங்கள் போடவேண்டும்.
பொழுதுள்ள உ
பொருள் அளவு இப்பொ
துள்ள மக்கள் எண்ணிக்
கே போதாதென்றால், ம
எண்ணிக்கை அதிகம
பொழுது பற்றாக்குறை
னும் அதிகமாகும். ஆக உ
உற்பத்தி உடனடித் தே
களைப் பூர்த்தி செய்வது
மக்கள் தொகை வளரு
யும் எதிர்பார்த்து அதிக
கப்பட வேண்டும்.

உணவு உற்பத்தியை எ
அதிக மாக்குவது எ
பார்த்தால் இரண்டு மு
மான முறைகள் உள்ளன.

(1) பயிர்த்தொழிலுக்
கூடிய நிலப்பரப்பை அ
மாக்குவது. இப்பொழுது
வுப் பொருள்களைத்
விளைநிலங்களுடன், பு
விளை நிலங்களை உ
டாக்கி, பண்படுத்தி, ப
தொழிலுக்குச் சேர்த்
கொள்ள வேண்டும்.
நிலங்கள், தரிசுகள் சேர்ப்
னத் திட்டங்களில் ப
தொழிலுக்கு உடன் பட்
விளைச்சல் அதிகமாகி,
வுப் பொருள்களின் அ
அதிகமாகும்.

(2) விளைநிலங்களின் ப
அதிகமாவது மட்
போதாது. நூறு ஏக்

(8-ம் பக்கம் பார்க்க)



உதிர்ந்த ரோஜா

செல்வன்

(முன் இதழ் தொடர்ச்சி)

ான் வாழ்வின் கடந்தகால டைப் புரட்டிப் பார்த்தால் ்களுக்காகக் காத்திருப்பதி ம், உங்கள் செயலைக் கவனிப் லுமே என் வாழ்நாளில் ரும்பகுதி கழிந்திருப்பதைக் ணலாம். என் வீட்டு சாவித் வாரத்தின் வழியாக எத் னயோ நாள் மணிக் கணக் காத்திருப்பேன் உங்களுக் க. சிரிக்கிறீர்களா? இப் ாழுதுகூட எனக்கு வெட்க ல்லை. எவ்வளவு ஆவலுடன் த்திருந்தேன் தெரியுமா? ாட்டும் பனியையும், சொட் வியர்வையையும் தாங்கிக் ாண்டு கையில் புத்தகத்து ன் எத்தனை நாட்கள் காத் ருப்பேன் தெரியுமா? அம்மா ங்கே கவனித்துவிடுவார் ளா என்ற பயம். தங்கள் ரவு நோக்கி முடுக்கிவிட்ட ந்திக்கம்பிபோல ஆவலுடன் த்திருப்பேன். நீங்கள் மாடி றி வந்ததும் என் உள்ளம் டிக்கும். உணர்ச்சி என்னுள் விளையாடும், நான் என் றன்றும் உங்கள் அருகில் ட்டுவதற்கேற்ற வீணையாகக் த்திருந்தேன். ஆனால் நீங் ளா என்னைப்பற்றிக் கவலைப் ட்டதாகத் தெரியவில்லை. ன் பதினாறு வயதுவரை என் வ்வொரு நிமிடமும் உங்களு டயதாகவே இருந்தன. நான் சய்யாத பைத்தியக்காரத்தன ன செயல்கள் எதுவுமில்லை. ன் பைத்யம் எந்த நிலைக் ச் சென்றது என்பதற்கு ரே ஒரு நிகழ்ச்சியைச் சொல் றேன் கேளுங்கள். நீங்கள் ட்டெறிந்த சிகரெட் துண்டு ன்றை இன்றும் என் அட் டப் பெட்டியில் பத்திரமாக வத்திருக்கிறேன். தங்கள் தட்டைத் தொடும் பாக்கியம் துதற்குக் கிடைத்ததே, அத ல் தான்!

நீங்கள் அடிக்கடி வெளியூர் சன்றுவிடுவீர்கள். அந்த ாட்களில் எல்லாம் எனக்கு அழுகையாகவரும். அழுதால் அம்மாவுக்கு விஷயம் எட்டி டும். ஆகையால் அழவும் டியாமல் எவ்வளவு அவதிப் டுவேன் தெரியுமா? அந்த ாட்களில் எனக்கு என்ன சய்வது என்றே தோன்றாது. நரமும், காலமும்வேறு எனக் த் துரோகம் செய்து நீண்டு காண்டிருக்கும். நான் எழுது வது பைத்யம் முற்றின அபலைப் பெண்ணின் அதீத கற்பனை என்று எனக்கு நன்றாகத் தெரியும். மணிக்கணக்கில், நாட்கணக்கில் நீங்கள்கூட மறந்திருக்கும் உங்கள் வாழ்வைப் பற்றி விரிவாகச் சொல்ல என்னால் முடியும். ஆனால் அவற்றையெல்லாம் சொல்லி உங்கள் பொறுமையைச் சோதிக்க மாட்டேன். அந்த நாள் நிகழ்ச்சிகளில் ஒன்றே ஒன்றை மட்டும் உங்களுக்கு விளக்கமாகக் கூறவிரும்புகிறேன், நீங்கள் மட்டும் சிரிக்கக்கூடாது. உங்களுக்கு அது பரிகாசத்திற்குரியதாகத் தோன்றினாலும் எனக்கு மிகவும் முக்கியமானது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. விடுமுறை நாள். நீங்கள் எங்கோ வெளியில் சென்றிருந்தீர்கள். உங்கள் பெட்டி ஒன்றை தூசியெல்லாம் தட்டி வராந்தாவிலிருந்து அறைக்கு எடுத்துச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டிருந்தான் உங்கள் வேலையாள். அவனால் அவ்வளவு பெரிய பெட்டியை தூக்கிச் செல்ல முடியவில்லை. "நானும் சேர்ந்து பெட்டியைத் தூக்கட்டுமா?" என்று துணிந்து கேட்டுவிட்டேன். உங்கள் வேலையாள் ஆச்சர்யப்பட்டானே தவிர மறுக்கவில்லை. மிகுந்த பயபக்தியுடன் நான் உங்கள் அறைக்குள் முதன் முதலாக காலடி எடுத்து வைத்தேன். அன்று நான் சுமந்து சென்ற பாரம் கையிலிருந்து நெஞ்சுக்கு மாறினது இன்னும் இறங்கியபாடில்லை! நீங்கள் வழக்கமாக உட்கார்ந்து எழுதும மேசை, அதன்மேல் அழகாக வைக்கப்பட்டிருந்த பூக்குவளை, சுற்றி சுவரில் மாட்டியிருந்த அழகான ஓவியங்கள், கண்ணாடி அலமாரிகளில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்கள் இவைகள் அடங்கிய என் கனவு உலகை—ஆம்! உங்கள் உலகத்தைத்தான் கூறுகிறேன்—கண்டேன். நான் விரும்பியிருந்தால் உங்கள் வேலையாள் அறையை நன்றாகச் சுற்றிப்பார்க்க அனுமதி தந்திருப்பான். ஆனால் என் வாழ்வு முழுவதுமே பிறர் பார்த்துக் கொடுக்கும்வரைக் காத்திருக்கிறேனே தவிர எனக்குத் தேவை என்று இன்றுவரை நானாக எதுவும் எடுத்துக் கொண்டதில்லை! வெறுங்கை கொண்டு முழம்போட்ட எனக்கு உங்கள் உலகின் சில நிமிட நேரக்காட்சி பல நாள் பட்டினிக்குப் பிறகு பலமான விருந்துபோல இருந்தது. அந்தச் சில நிமிட நேரங்கள் என் வாழ்வின் இன்பமான நேரம். இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால், என்னை யார் என்று தெரியாத நீங்கள், கடைசியாக என்வாழ்வு உங்களைச்சுற்றியே வட்டமிட்டு, உங்கள் வாழ்வுடன் பின்னிப் பிணைந்து இருப்பதைத் தெரிந்து கொள்வீர்கள் என்ற நம்பிக்கைதான்.

உங்களைப்பற்றிய சிந்தனையில் என் வீட்டுக்கு யார் வருகிறார்கள், என்ன பேசுகிறார்கள் என்பவைகளையோ அல்லது என் தாய் என்ன செய்கிறாள் என்பதைப்பற்றியோ நான் கவலைப்படுவதில்லை. அதற்கு நேரம் எனக்கு எங்கே இருந்தது! எங்கள் வீட்டுக்கு எங்கள் தூரத்து உறவினரான ஒருவர் அடிக்கடி வருவது வழக்கம். அவர் ஒரு வியாபாரி. மனைவியைப் பறிகொடுத்தவர். வியாபாரவேலையாக அடிக்கடி வெளியூர் செல்லவேண்டியிருந்தது. என் தாயைத் தன்னுடன் தங்கி தன் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளும்படி அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார். என் வயது வளர என் தாயின் துயரமும் வளர்ந்தது. வாழ்க்கை நடத்துவது கடினமாக இருந்தது. வீட்டுக்காரர் வேறு வாடகைப் பாக்கிக்காக அடிக்கடி தொந்தரவு செய்து கொண்டிருந்தார். இங்நிலையில் நிலையான வருவாயுடன் சுகமான வாழ்வும் கிடைக்க இருப்பதை நழுவவிட என் தாய் விரும்பவில்லை. ஒரு நாள் என் தாய் என்னை அழைத்து அருகில் உள்ள கிராமத்தில் அந்த உறவினர் வீட்டுடன் தங்கும் தன் திட்டத்தை என்னிடம் சொன்னாள். எங்கே என்மீது சந்தேகம் கொண்டு என்னைக் கண்டிக்கக் கூப்பிடுகிறாளோ என்று நினைத்து பயத்துடன் சென்ற எனக்கு என் தாயின் பேச்சு பேரதிர்ச்சியைக் கொடுத்தது. கண்கள் சுற்றின. எதிரே இருப்பவையெல்லாம் திடீரென்று இருட்டரையாக மாறின. அடுத்து என்ன நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை. சிறிது நேரம் கழித்துக் கண் விழித்தால் என் தாய் அருகில் அமர்ந்து விசிறிக் கொண்டு இருந்தாள். "உடம்புக்கு என்னம்மா? ஏன் மயக்கம் ஏற்பட்டது?" என்று என் தாய் பரிவுடன் கேட்டாள். அவள் பரிவு என்னைப் பரிகசிப்பது போலிருந்தது. நகை நட்டு, துணிமணி தேவை என்று அம்மாவைக் கேட்பது போல், என் விருப்பத்தை எடுத்துக்கூற முடியுமா?

கிராமத்திற்குச் செல்வதற்கு எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்றன. மூட்டை முடிச்சுகள் எல்லாம் ஏற்றிவிட்டார்கள். நாங்கள் மறுநாள் காலை புறப்படுவது என நாளும் குறித்தாய் விட்டது. என் தாய் எங்கோ வெளியில் சென்றிருந்தாள். உங்களைத் தவிர வேறு உலகில்லை என்று இருந்த எனக்கு வெறிபிடித்துவிட்டது. ஆம்! இல்லையென்றால் அப்படி ஆவேசத்துடன் அன்று உங்கள் கதவைத் தட்டி இருக்கமாட்டேன். தட்டினேன்—தட்டினேன், கை வலிக்கும் வரை தட்டினேன். நான் தட்டியதின் எதிரொலி தான் கேட்டது. நீங்களும் இல்லை! உங்கள் வேலையாளும் இல்லை! ஏமாற்றத்துடன் என் அறைக்கு வந்தேன். படுக்கையில் விழுந்தேன். வீட்டில் அம்மா இல்லாதது எனக்குக் கொஞ்சம் ஆறுதலாயிருந்தது. இருந்த ஆத்திரத்தையெல்லாம் வைத்து நன்றாக வாய்விட்டு ஒரு பாட்டம் அழுது தீர்த்தேன். அன்று இரவு எப்படியாவது உங்களைப் பார்த்து உங்கள் காலடியில் வீழ்ந்து என்னைத் தங்களுடன் வைத்துக் கொள்ளும்படி மன்றாடிக் கேட்டுக் கொள்வது என்று முடிவு செய்தேன். உங்களைத் தவிர வேறு எனக்கென்று எதுவும் இல்லை என்ற என் நிலைதான் என்னை இந்த முடிவுக்குத் தூண்டியது.

இரவு பத்து மணி, எல்லோரும் படுத்து விட்டார்கள். மெதுவாக எழுந்து வராந்தாவிற்கு வந்தேன். உங்கள் அறையில் வெளிச்சம் இல்லை.

...துவும் பூட்டியிருந்தது. வெகு நேரம் வெளியில் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தேன். கால்கள் மரத்துவிட்டன. சுவரில் சாய்ந்தவாறு தொப்பென்று தரையில் வீழ்ந்தேன். உடல் ஒத்துழைக்க மறுத்து விட்டது. உள்ளமோ மிக்க விழிப்புடன் இருந்தது. ஆள் அரவம் எதுவும் இல்லை. உங்கள் அறையின் கடிகாரம் பன்னிரண்டு அடித்தது. நேரம் ஆக ஆக என் நம்பிக்கை தளர்ந்து கொண்டு வந்தது. விழிகள் சோர்ந்தன. கடிகாரம் ஒன்று அடித்து ஓய்ந்தது, விடிந்து விடுமே சீக்கிரம் என்ற பயம் புகுந்து கொண்டது என் நெஞ்சில். யந்திரம் தானே கடிகாரம். அதற்கென்ன தெரியும் என் இதயத்துடிப்பு. தன் கடமையைச் செய்யும் வேகத்தில் இரண்டு என்று அறிவித்துவிட்டு மூன்ருவது மணியைத் துரத்திக் கொண்டு ஓடியது.

மாடிப்படிகளில் யாரோ ஏறி வரும் ஓசை கேட்டது. மெதுவான குரலில் பேச்சுக்குரல் கேட்டது. யாருடன் பேசுகிறீர்கள் என்று தலையைத் தூக்கிப் பார்த்தேன். ஒரு பெண்ணுடன் சிரித்துப் பேசிக் கொண்டு வந்தீர்கள். என் எண்ணம் எல்லாம் மண்ணாயிற்று. அன்று இரவு முழுவதும் எப்படிக் கழித்தேன் என்று எனக்கே தெரியவில்லை. மறுநாட்காலை என்னை கிராமத்திற்கு அழைத்துச் சென்று விட்டார்கள்!

நேற்று இரவு என் மகன் இறந்துவிட்டான். நாளைக் காலை மயானத்துக்கு எடுத்துச் சென்று விடுவார்கள். மறுபடியும் என்னைத் தனியே தவிக்க விட்டு விட்டு என் மகன் போய்விட்டான். துக்கம் விசாரிக்க வருபவர்கள் ஆறுதல் வார்த்தைகள் கூறுவார்கள். வார்த்தைகள்! வெறும் எழுத்துக்களின் உணர்ச்சியற்ற சேர்க்கை! ஈடுசெய்ய முடியாத என் இழப்பிற்கு வெறும் வார்த்தைகள் என்ன உதவி செய்ய முடியும்? மனித இனத்தின் நடுவில் தனியாக இருப்பதைத் தவிர வேறு கொடுமை எதுவும இல்லை. ஆனால் நான் தனியே தவிப்பதைத் தவிர வேறு வழியில்லை. எதைத் தொட்டாலும் ஏக்கம், எது செய்தாலும் அதிருப்தி. தனியாக இருந்து உங்களை நினைத்து உருகுவதையே எனக்குத் தண்டனையாக்கிக் கொண்டேன். வேடிக்கை விருந்துகளில் கலந்து கொள்வதில்லை. வீட்டை விட்டு வெளியேறுவதில்லை! எங்கள் வீடும் தெருவும் தவிர வேறு எதுவும் எனக்குத் தெரியாது!

அரண்மனையையும் அரச போகத்தையும் துறந்தான் புத்தன். நான் இன்பத்தையும் மகிழ்ச்சியையும் துறந்தேன். அவனுக்கும் இளவயது. நானும் பருவ வயதினள். சொல்லப் போனால் இன்பத்தின் சுவையை அறிந்த பிறகே புத்தன் அதைத் துறந்தான்.

ஆனால் நானோ...! புத்தனுக்கு தேவைக்கு அதிகமாக விரும்பிய தெல்லாம் கிடைத்தது. அதையெல்லாம் அனுபவித்து அதனால் ஒன்றுமில்லையென உணர்ந்து துறவியானான்! ஆனால் நான் விரும்பியது கிடைக்காத வெறுப்பில் துறவு வாழ்வு நடத்தினேன்! ஆசையை அகற்று துயரத்தைத் தவிர்க்கலாம் என்றான் புத்தன். ஆசை நிறைவேருததால் துயரத்தை வலிய வரவழைத்துக் கொண்டேன் நான்!

அந்த இரண்டாண்டுக் காலத்தில் நீங்கள் எழுதிய புத்தகங்கள் எல்லாம் ஒன்று விடாமல் வாங்கி வரிவரியாகப் படித்தேன். உங்கள் புத்தகத்தின் ஒவ்வொரு எழுத்தும் எனக்கு ஒவ்வொரு குறளாக இருந்தது. மாலை நேரங்களில் நீங்கள் எங்குச் செல்வீர்கள், என்ன செய்வீர்கள் என்று கற்பனை செய்வதில் எனக்கு அலாதி இன்பம். பத்திரிக்கைகளில் பாராட்டு, உபசரிப்பு என்று படிக்க நேரிட்டால் அதில் எப்படிக் கலந்து கொள்வீர்கள் என்றெல்லாம் நினைத்துப் பார்த்து நீண்டதொரு பகற்கனவில் ஆழ்ந்து விடுவேன்.

நான் ஏன் இவற்றையெல்லாம் எழுதவேண்டும்? கைவிடப்பட்ட குழந்தை யுள்ளத்தில் எழுந்த நிறைவேரு நினைவுகளின் துன்ப அலைகள்! என் துயரத்தையும் வேதனையையும், அன்பையும் ஆதரவையும் கொஞ்சம்கூடக் கவனிக்காத உங்களிடம் ஏன் இதைச் சொல்கிறேன்? நான் குழந்தைதானே! கிராமத்தில் வீட்டின் சன்னலோரத்தில் உட்கார்ந்தே பதினேழு வயதைத் தாண்டிவிட்டேன். பதினெட்டாம் ஆண்டில் அடியெடுத்து வைத்தேன். காலம் என் கட்டளைக்குக் காத்திருக்கிறதா என்ன! இளமையையும் அழகையும் என்மீது அள்ளித் தெளித்துவிட்டு காலம் தன் போக்கில் சென்று கொண்டிருந்தது.

தனியாக உட்கார்ந்து கொண்டு 'பைத்தியம்' போல் எதையோ நினைத்து ஏங்கும் என் நிலை கண்டு இரங்கிய எங்கள் உறவினர் என் வேண்டுகோளுக்கு இணங்கினார். இரண்டாண்டுகளுக்குப் பிறகு மறுபடியும் நீங்கள் இருக்கும்—நாம் இருந்த இடம்—இடத்திற்கு வந்தேன். உறவினரின் உதவியால் 'பூ வேலை' செய்யும் கடையொன்றில் வேலை கிடைத்தது. ஒரு அறை ஒன்றை வாடகைக்கு எடுத்துக் கொண்டு நகரத்தில் என் வாழ்க்கை மீண்டும் தொடங்கினேன். நகரத்திற்கு வந்த நாளிலிருந்து ஒவ்வொரு நாளும் மாலை நேரத்தில் என் வேலை முடிந்ததும் உங்கள் அறை இருக்கும் தெருவிற்கு வருவேன். உங்கள் அறைக்கு எதிராக தெருவில் நின்று கொண்டு உங்கள் அறையில் விளக்கு எரியும் வரை காத்திருப்பேன். நீங்கள் அறையிலிருந்து வெளியேறும் போதோ அல்லது வெளியிலிருந்து அறைக்குத் திரும்பும் போதோ எப்பொழுதாவது உங்களைச் சில நிமிடங்கள் சந்திக்கும் பாக்கியம் எனக்கு கிடைக்கும். அந்தச் சில நிமிட நேரங்களை நினைத்து, மணிக்கணக்கில் காத்திருந்து ஏமாற்றத்துடன் திரும்புவது தான் என் வாடிக்கை, வழக்கம், பொழுது போக்கு எல்லாம்.

ஒருநாள் இரவு ஏழு மணி இருக்கும். வழக்கம்போல் உங்கள தரிசனத்திற்காகக் காத்திருந்தேன். நான் இமை கொட்டாது அறையை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனல் நீங்கள் வெளியிலிருந்து அப்பொழுது தான் அறைக்குத் திரும்புவதற்காக தெருவில் என்னைக் கடந்து சென்றீர்கள். முன்போல சிறு குழந்தையாயிருந்தால் துணிவுடன் கதவைத் தட்டியதுபோல் உங்களுடன் பேசியிருப்பேன். 18 வயது தாண்டிய பருவமங்கை நான். ஆசை முன்னே தள்ள அச்சம் பின்னே இழுக்க வேகமாக வீட்டுக்கு வந்துவிட்டேன். அன்று இரவு முழுவதும் என்மேல் எனக்குக் கோபம் கோபமாக வந்தது. நீங்கள் என்னைப் பார்க்க வேண்டும். நான் உங்களிடம் கொண்டிருக்கும் அன்பைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். என்னுடன் நீங்கள் பேசவேண்டும் என்று எத்தனை ஆண்டுகள் தவம் கிடந்தேன்! பாழாய்ப் போன வெட்கமும், அச்சமும் வந்து என்னை உங்களுடன் பேசவிடாமல் தடுத்துவிட்டதுடன் என் வேதனையை வேறு கிளப்பிவிட்டதே!

மறுமுறை உங்களைப் பார்க்கும் பொழுது எப்படியும் பேசிவிட வேண்டும். உங்களைப் பார்த்ததும் ஓடி வந்துவிடக்கூடாது என்று திடமான முடிவுக்கு வந்தேன். வழக்கம்போல் உங்கள் வரவு நோக்கி தெருவில் காத்துக் கிடந்தேன். பல நாள் உங்களைக் காண முடியாது. இந்த ஏமாற்றத்தை எப்படியாவது தாங்கிக்கொள்வேன். சிலநாள் வேறு எவளுடனாவது சென்று விடுவீர்கள். சென்ற ஐந்து ஆண்டுகளாக நான் கண்ட காட்சிதான் என்ருலும் இப்பொழுது அதே காட்சியைக் காணும்பொழுது என் உள்ளத்தில் பொருமை எழும். உங்களுடனிருப்பவளை எரித்துவிடுவதுபோல் பார்ப்பேன். என் உடல் வெளியிட முடியாத வேதனையால் துடிக்கும்.

கடைசியாக ஒரு நாள், இரவு ஏழு மணி இருக்கும். தெருவில் நெருக்கடி அதிகமாக இருந்தது. நீங்கள் அறைக்குத் தனியாக வந்து கொண்டிருந்தீர்கள். நான் நிற்குமிடத்தில் என்னை நெருங்கிச் சென்றீர்கள். நம் இருவர் கண்களும் சந்தித்தன. உங்கள் நடையின் வேகம் குறைந்தது. என் இதயத் துடிப்பின் வேகம் அதிகரித்தது! என்னைத் தாண்டி நீங்கள் சென்றதும் நான் மெதுவாகத் திரும்பிப் பார்த்தேன். நீங்கள் என்னையே பார்த்துக்கொண்டிருந்தீர்கள். கடைசியாக என்னைப் புரிந்து கொண்டுவிட்டீர்கள். என் அன்பை ஏற்றுக் கொள்வீர்களென்று எண்ணினேன். ஆனல் உங்கள் கண்களில் அன்பின் சாயல் இல்லை. குடிகாரன் புட்டியைப் பார்க்கும் பார்வைக்கும் நீங்கள் என்னைப் பார்த்த பார்வைக்கும் வித்தியாசம் இல்லை. அன்று—இன்று—நாளை! என்றுமே நீங்கள் என்லை, என தியாகத்தை, உங்களிடம் நான் செலுத்திய அன்பை அறியவில்லை! என்னை யார் என்று தெரியாத ஒருவருக்காக நான் வாழ்நாள் முழுதும் அன்பு செலுத்தி அவரை நினைத்து உருகி உயிர்விடவேண்டியவளானேன்! ஆண்களின் இதயம் முகம் பார்க்கும் கண்ணடி. ஒரு முறை பார்த்த முகத்தை மறுமுறை நினைவிற்கொள்ளும் சக்தி அதற்குக் கிடையாது.

என்னைத் தொடர்ந்து அதே இடத்தில் அதே நேரத்தில் பார்த்ததும் உங்கள் பார்வை என்மீது திரும்பியது. நான்காம் நாள் நாமிருவரும் சந்தித்தோம். என்னைப் பின்பற்றி வந்து என்னிடம் பேசினீர்கள். நீண்ட நாட்கள் நினைத்த என்



எண்ணம் ஈடேறியது. மகிழ்ச்சிப் பெருக்கில் என் உள்ளம் விம்மி வெடித்துவிடும் நிலையை அடைந்தது. உங்களுக்குப் பழக்கமான வழியில் பல நாட்கள் பழகியவரைப் போல் என்னிடம் ஏதேதோ பேசினீர்கள். இருவரும் ஒன்றாக உணவு அருந்தினோம். உங்கள் அறைக்குச் சென்றோம். அன்று இரவு முழுவதும் உங்களிடம் கழித்தேன். என் வாழ்வில் எத்தனையோ நாட்களாக எதிர்பார்த்து ஏங்கியது எனக்குக் கிடைத்தது! அந்த நாள்! என் வாழ்வில் என்றுமே மறக்கமுடியாத நாள்! விடிந்ததும் நான் வீட்டுக்குக் கிளம்பும் வேளையில் என்னை நீண்டநேரம் உற்றுப் பார்த்தீர்கள். பழைய நினைவுகள் ஏதாவது தோன்றி என்னை நீங்கள் அறிந்துகொண்டீர்களோவென எண்ணினேன்! முடிவில் மேசை மீதிருந்த பூத்தொட்டியிலிருந்து நான்கு மலர்களை என்னிடம் கொடுத்தீர்கள். ஆண்டுகள் பல உருண்டோடியும் அந்த ரோஜா மலர்கள் இன்றும் என் பூஜைக்குரிய புனிதப் பொருளாக இருக்கின்றன — ஆனால் அவை கருகிய மலர்கள், என் வாழ்வைப்போல!

மூன்று இரவுகள் சந்தித்தோம். ஒவ்வொரு நாளும் விடிந்து நான் உங்களை விட்டுப் பிரியும்பொழுது ரோஜா மலர்கள் எனக்குக் கிடைத்தன. அத்துடன் நீங்கள் சில நாட்கள் வெளியூர் செல்லும் வேதனைச் செய்தியையும் சொன்னீர்கள். கடிதம் எழுதுகிறேன் என்றீர்கள். வெளியூரிலிருந்து திரும்பியதும் சந்திக்கிறேன் என்றீர்கள். ஒரு வாரம்—ஒரு மாதம்—ஒரு வருடம். உங்களிடமிருந்து ஒரு கடிதம்கூட இல்லை. உங்கள் அறையில் விளக்கு எரிந்தது. ஆனால் என் இதயத்தில் இருள் சூழ்ந்தது. நீங்கள் என்னைத் தேடவில்லை. கடிதமும் எழுதவில்லை. என்னைப்பற்றிய கவலையே இல்லாமல் இருந்தீர்கள்.

நேற்று இறந்தவன் உங்கள் மகன். ஆம்! நம் மகன்! நம் செல்வன் பிறக்கும் வரை நான் உங்களுடையவளாக இருந்தேன். அவன் பிறந்த நேரத்திலிருந்து உங்களைப்பற்றிய நினைவு மங்கியது. வாழ்வு எனக்களித்த ஏமாற்றத்தை, வேதனையை நீங்கள் எனக்களித்த செல்வத்தைக்கண்டு போக்கிக்கொள்ள முயன்றேன். முடிவில் இயற்கை என் செல்வத்தையும் எடுத்துக்கொண்டு விட்டது. பிறந்த உடன் இறந்திருந்தால் எனக்கு இவ்வளவு வேதனை இருந்திருக்காது. பிறந்து வளர்ந்து வாலிபப்பருவத்தில், என் இன்பக் கனவுகள் நிறைவேறும் என்று ஆவலுடன் காத்திருந்த நேரத்தில் என்னைக் கைவிட்டு எங்கோ சென்று விட்டான் செல்வன்! வாழ்வில் எனக்கென்று இருந்த ஒரே பொருள் பறிக்கப் பட்டுவிட்டது! இனி நான் யாருக்காக வாழவேண்டும்? நான் முன் கூறியதுபோல என் செல்வன் பிறந்த தினத்திலிருந்து உங்கள் மீதிருந்த அன்பும் ஆசையும் மங்கி மறையும் நிலைக்கு வந்துவிட்டது. ஆனால் நான் உங்கள் ஒவ்வொரு பிறந்த தினத்தன்றும் நான்கு ரோஜா மலர்கள் அனுப்புவதை மட்டும் இதுவரை மறக்கவில்லை.

என் தலை சுற்றுகிறது. உடல் வலிக்கிறது. ஜுரம் நெருப்பாகக் கொதிக்கிறது. நான் படுக்கவேண்டும். படுக்கையில் இருந்து இனி எழுந்திருக்கவேமாட்டேன். எனக்கு இதற்குமேல் எழுதமுடியவில்லை. எல்லாவற்றையும் உங்களுக்குச் சொல்லிவிட்டேன். அந்த ஒரேநிறைவுடன் மரணத்தைத் தழுவுகிறேன். என்மரணத்தால் உங்களுக்கு எந்தத் தொல்லையும் இல்லை. ஆனால் இனிமேல் உங்கள் பிறந்த தினத்தன்று யார்ரோஜா மலர்கள் அனுப்புவார்கள்? மேசை மீதிருக்கும் பூத்தொட்டி காலியாகத்தானே இருக்கும். எனக்கென்று இதுவரை எதுவும் உங்களைக் கேட்டதில்லை. உங்கள் ஒவ்வொரு பிறந்த நாளிலும் என் நினைவாக நான்கு ரோஜா மலர்கள் வாங்கி பூத்தொட்டியில் வையுங்கள். எனக்காக இதைச் செய்யுங்கள். இறந்தவர்களுக்காக 'நீத்தார் நினைவு நாள்' கொண்டாடுகிறார்கள். கோயில் விசேஷ பூஜை செய்கிறார்கள். எனக்காக பூஜை எதுவும் வேண்டாம். எனக்கு கடவுளின்மீது அன்பு இல்லை; நம்பிக்கை இல்லை. என் அன்பு, நம்பிக்கை எல்லாம் உங்கள் ஒருவரிடம்தான். என் ஒரே வேண்டுகோள்! அதுவும் கடைசி வேண்டுகோள் நாம் இன்பமாக இருந்த நாட்களின் நினைவுச் சின்னம் அந்த ரோஜா மலர்கள். மறவாமல் நிறைவேற்றுங்கள்......

............வருகிறேன்...

வணக்கம்.

பரமானந்தம் தந்த கடிதத்தைப் படித்து முடித்தவுடன் அந்தக் கடிதம் என்னையறியாமல் என் கையிலிருந்து கீழே விழுந்தது. என் கண்களில் நீர் துளித்து நின்றது. மெல்ல என் நெஞ்சத்தை அழுத்திப் பிடித்துக்கொண்டு எதிரே இருந்த பரமானந்தத்தைப் பார்த்தேன். அவன் வான வெளியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்தக் கண்களில்தான் எத்தனை உணர்ச்சிக் குவியல்! குமுறும் உள்ளத்தை, ஏமாற்றமடைந்த இதயத்தை அவை எதிரொலித்தன. தழுதழுத்த குரலில் 'பரமானந்தம்' என்றேன். பதில் சொல்லாமல் என்னைப் பார்த்தான். ஏங்கித் தவித்த ஓர் இளம் இதயத்தை தன்னையறியாமல் துடிக்க வைத்துவிட்ட அவன் இனி என்ன செய்ய முடியும்? அவள் இன்று உலகை விட்டே மறைந்து விட்டாள். ஆனால் இதோ என் எதிரே பரமானந்தம் மாறாத மனக் குழப்பத்தோடு, நீங்காத நெஞ்சுக்குமுறலுடன் நித்தம் நடமாடும் ஓர் ஜீவனாகி விட்டான். அந்த உள்ளத்தின் வடு என்றுமே மாறாது மறையாது! அந்தப் புண்ணை ஆற்றுவதற்கு இனி யாராலும் முடியாது! காலம் ஒன்றுதான் அதனை ஓரளவுக்குச் செய்ய முடியும்! ○

பஞ்சமில்லா நாடு!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

விளைந்த இடத்தில், அத்துடன் ஐம்பது ஏக்கர் நிலம் பயிர்த்தொழிலுக்கு பண்படுத்தப்பட்டுச்சேர்க்கப்பட்டால் மொத்தம் நூற்றைம்பது ஏக்கர் நிலம் கிடைக்கிறது. அத்துடன் திருப்தியடைந்து விடாமல், முன்பு இருந்த விளைச்சல் அளவை அதிகப்படுத்த வேண்டும். விவசாய நாடுகளில் பெரும்பாலும் மிகப் பழைய முறைகள் தாம் கையாளப் பட்டுவருகின்றன. அவற்றில் உழைப்பு அதிகமிருந்த போதிலும் பலன் குறைவாக இருக்கும். விஞ்ஞான முறையில் பயிர்த்தொழில் நடத்தப்பட்டால், விளைவு அதிகமாவதற்கான வழியுண்டு. இயந்திர வசதிகளுடன் பயிர்தொழில் செய்யப்பட்டால், இப்பொழுது கிடைப்பதை விடப் பலமடங்கு அதிகமான விளைச்சல் கிடைக்கச் செய்யலாம். நமது நாட்டில் மழுங்கிய ஏரை மெலிந்த மாடு அசைக்க, அது உரமில்லாத நிலத்தில் சில கீரல்களைப் போட்டுச் செல்கிறது. அந்த விதமாக உழுது விடப்பட்ட நிலத்தில் விளைவும் மிகக் குறைவாக இருக்கிறது.

இங்கு கிடைக்கும் விளைச்சலைவிட அமெரிக்காவில் எட்டு மடங்கு அதிகமாகக் கிடைக்கிறது, இயந்திர வசதிகளுடன் பயிர்த்தொழில் நடக்கிற காரணத்தால்!

இங்கு கிடைப்பதைவிட மூன்றுபங்கு அதிகமான விளைச்சல் சப்பான் நாட்டு உழவனுக்குக்கிடைக்கிறது. அங்கு விஞ்ஞான முறையில் உழவும் நடவும் நடக்கிறபடியால்!

உணவுப் பற்றுக்குறையை நீக்க தரிசு நிலங்கள் பண்படுத்தப்பட்டு விளைநிலங்களாக ஆக்கப்பட வேண்டும். பயிர்
தொழிலில் விஞ்ஞானமுறை
கையாளப்பட்டு விளைவு அதி
ரிக்கப் படவேண்டும் இவைகள்
மண்ணைப் பற்றிய திட்டங்கள்
அத்துடன் நின்றால் போதாது
மண்ணிலிருந்து விளை
எடுக்கவேண்டிய உழவர்களை
யும் சற்றுக் கவனிக்க வேண்
டும்.

நிலம் பண்படுத்தப்பட்
விளைநிலமாக்கப் படுவதுபோல
உழவர்களின் உள்ளமு
பண்படுத்தப்பட்டு, புதுமை
விளையுமிடமாக ஆக்கப்படுத
வேண்டும். உழவு முறையி
மட்டுமல்ல, கருத்துக்களிலு
விஞ்ஞானத்துக்கு இடம் தர
படவேண்டும். மண்ணை வள
படுத்தவேண்டும் - உழவனி
மனமும் வளம் எய்தவேண்டு

உழவர்களுக்குக் கல்விமுறை
தரப்படும் சிற்றூர்களி
உயர்தரக் கல்வி, விஞ்ஞான
கல்வி, ஆய்வு நுட்பம் இவை
புகவேண்டும். ஆப்பிரிக்க
கண்டத்தில் இருக்கும் பயிர்
தொழில் முறையை ஆராய்ந்
அதை விரிவுபடுத்த ஆலோ
சனை தந்த பேராசிரியர் ஆர்த
லூயி என்பவர் "பயிர்த்தொழி
முன்னேற்றத்தில் முதலாவதாக எடு
துக்கொள்ளவேண்டிய திட்டம் உ
வர்களிடை கல்வியறிவு பரவச் செ
வதாகும்" என்று சொன்ன
உணவுஉற்பத்திஅதிகரித்தா
வேண்டுமென்றால், (1) அதி
நிலங்களை பயிர்த்தொழிலு
குக் கொண்டுவர வேண்டு
(2) முன்பைவிட விளைச்ச
அதிகமாகவேண்டும். (3) உ
வர்களிடை கல்வியறிவும் வி
ஞானப்பாங்கும்பரவவேண்டு

தென்னாட்டை வைத்து
பார்த்தால், இந்த மூன்று அ
வின்படியும் தாழ்ந்த நிலையி
தானிருக்கிறது.

அதிக நிலங்கள் பயிர்
தொழிலுக்குக் கொண்டுவ
வேண்டுமென்றால், நாட்டி
நீர்ப்பாசனத்திட்டங்கள் அதி
மாக வேண்டும். இரண்டு ஆ
தாண்டுத் திட்டங்களில்
போடப்பட்ட நீர்ப்பாசனத்தி
டங்களெல்லாம் வடக்கி
குவிந்தனவேயன்றி, தெற்கி
குறிப்பிடத்தக்க எதுவும் உ
டாக்கப்படவில்லை.

இரண்டாவதாக விளை
அதிகரிக்க உரம் தேவை
உரத் தொழிற்சாலை வடக்கி
உண்டாக்கப்பட்டது. அதனா
வடக்கிலுள்ளவர்களுக்கு
கிடைக்கும் பலன் தென்னா
வர்க்குக் கிடையாது.

மூன்றாவதாகக் கல்வியறி
பரவுதல். 100க்கு14பேர் படித்
நாட்டில், பெரும்பாலோர் த
குறிகள், அதிலும் சிற்றூர்க
லுள்ள உழவர்களைப் பற்
கேட்கவேண்டியதில்லை. மூட
தனம், அறியாமை இவற்றி
இருளில் அடங்கிக் கிடப்ப
கள். சூழ்ந்துள்ள அந்த இரு
விளக்கப்பட்டால், அவர்களி
அகத்திலும் முகத்திலும் ஒ
தோன்றும். உழவு சிறக்கு
பயிர் வளரும் - உணவுப் ப
டங்கள் அதிகமாகும்.

★ அடுத்த இதழில் ★

இரா. செழியன் எம். ஏ.

எழுதும்

"தீண்டாதவன்"

என்ற சிறுகதை வெளிவரும்!

இன்ரு இன்னுரை

இரா. நெடுஞ்செழியன்

அவள் செல்வக் குடியில் பிறந்த சீரியோளாதலால், கவலைக் கிடமில்லாத மட்டற்ற மகிழ்ச்சியோடு வாழ்ந்து வருகிருள்.

அவளது பெற்ருேர்களும் அவள் ஒரேமகளாதலால் அவளைப் பொன்னே போலும் கண்ணே போலும் போற்றி, இனிய முறையில், வளனும் நலனும் கொழிக்க, அவளைப் பேணி வளர்த்து வருகின்றனர்.

அவளது மாளிகைக்கு முன்னுல் பரப்பப்பட்டிருக்கும் மணற் பரப்பில், பிற தோழிப் பெண்களோடு சேர்ந்து பொம்மைவிளையாட்டு விளையாடியும், நொச்சி மரங்கள் நிறைந்த காட்டிடத்தே சென்று ஆட்டம் ஆடியும், பைங்கிளியோடு பேசி மகிழ்ந்தும் அவள் பொழுது போக்கி வருகிருள்.

அழகும் கவர்ச்சியும் மிகுந்த இளம் பருவப்பெண் ஒருத்தி நொச்சிக்காட்டில் ஆட்டம் ஆடுவதைக் கண்ட ஆணழகன் ஒருவன், அவளிடம் தன் உள்ளத்தைப் பறிகொடுத்து விடுகிருன். பல நாட்கள் வருகிருன் அசைவற்று நிற்கிருன்; தலைவி மீது வைத்த விழி எடுக்காமல் அவளையே காதல் மேம்பாட்டால் பார்க்கிருன்; அவளும் பார்க்கிருள்; அவளது உள்ளமும் அவன்பால் பறிபோகிறது; இருவரும் கண்களால் பேசிக் கொள்கிருர்கள்; கலந்து உறவாடுகிருர்கள்; காதல் நட்பு கொள்கிருர்கள்; களவொழுக்கத்தில் ஈடுபடுகிருர்கள்.

தலைவன் நாள்தோறும் வருவதும், தலைவியைத் தனியொரு இடத்தில் பகற்பொழுதில் காண்பதும், தான் கொண்டுவரும் நறுமணம் மிக்க அழகிய மலர்களை அவளது கூந்தலில் சொருகிப் பார்த்து மகிழ்வதும், அவளோடு இயற்கைக் காட்சிகளைக் கண்டுகளித்துக் காதல் மொழி பேசியிருப்பதும் அவளைக் கட்டியணைத்து முத்தமிட்டு அவளோடு கூடியிருப்பதும் ஆன இன்ன பிற களவொழுக்கப் பழக்கங்களில் ஈடுபட்டுத் திளைத்து மகிழ்ந்திருக்கிருன்.

நங்கையும் வேற்றூரிலிருந்து வரும் நம்பியும் கூடி மகிழ்ந்து களவொழுக்கத்தில் ஈடுபட்டிருக்கும் செய்தியை, ஊரிலுள்ள வம்புப் பெண்டிர்கள் எப்படியோ தெரிந்து கொண்டுவிடுகிருர்கள். இச்செய்தியை ஊர்முழுவதும் அலர்தூற்றி அம்பலப்படுத்துவதில் அப் பெண்டிர் மும்முரமாக இறங்குகிருர்கள்.

தன் மகள் வேற்றூர் ஆணழகன் ஒருவனேடு களவொழுக்கம் நடத்துகிருள் என்ற செய்தியைத் தாய் கேட்டுத் திகைப்படைகிருள். அவள் அதன் உண்மையைக் குறித்து செவிலித்தாயிடம் கேட்கிருள். செவிலித்தாய், அப்படி ஏதுஒன்றும் நிகழ்வதாகத் தனக்குத் தெரியவில்லை என்று மறுமொழி கூறுகிருள். தன் மகள் மிக்க இளையவள் ஆயிற்றே, இப்பொழுதுதானே தக்க பருவம் எய்தியிருக்கிருள், இவள் எங்கே அதற்குள் காதல் துறையில் ஈடுபட்டுக் களவொழுக்கம் நடத்தியிருக்கப் போகிருள்; வம்புப் பெண்டிர் பொய்யுரை புகல்கிருர்கள் போலும் என்றும் எண்ணி நற்ருய் தன் மனதைத் தானே அமைதிப்படுத்திக்கொள்கிருள்.

நற்ருய், ஊரார் தூற்றும் அலர்மொழிகளைக்கேட்டுக் கொள்ளாதவள்போலவும், தன் மகள் மீது ஐயப்படாதவள் போலவும் காட்டிக் கொண்டு ஏதும் அறியாதவள் போல் இருந்து வருகிருள். என்ருலும் தன் மகளின் நடமாட்டங்களையும், நடவடிக்கைகளையும் உற்றுக் கவனித்து வருகிருள்.

தன் மகள் முன்பெல்லாம் போலில்லாமல் மிக்க மகிழ்ச்சியோடு ஆடிப்பாடி மகிழ்ந்திருப்பதும், ஆடவரோடு தொடர்பில்லாத பருவப் பெண்ணிடத்தில் இயல்பாகக் காணப்படும் அச்சம்,நாணம் போன்ற பண்புகள் அவளிடம் சற்றுக் குறைந்து காணப்படுவதும், வெளியே போய் வரும்போது அவளது கூந்தலும் ஆடையும் கலைந்து தென்படுவதும், தன் ஊரிலே கிடைக்கப் பெருத ஆனுல் வேற்றூரில் மட்டுமே காணப்படும் வித விதமான புதிய நறுமண மலர்களை அவள் தன் கூந்தலிலே ஏந்தி வருவதும் ஆன காட்சிகள், ஐயப்பாட்டை உண்மையென உறுதிப்படுத்துவனவாக இருப்பதை நற்ருய் உணருகிருள். அதைப்பற்றிய மூச்சுப் பேச்சை வெளிக்காட்டிக் கொள்ளமல், நற்ருய் எப்பொழுதும் போல் மகளிடம் அன்பும், ஆதரவும் காட்டி வருகிருள்.

ஊரில் அலர்தூற்றுதல் மிகவாகிப், பலரும் தலைவியின் செய்கையை இழித்தும், பழித்தும், ஏளனமாயும் கூறுவதை நற்ருய் கேட்டறிகிருள். மகளின் களவொழுக்கத்தைத் தான் அறிந்துகொண்டிருப்பது, மகளுக்குத் தெரிந்தால், அவள் அஞ்சி ஒருகால்அக் களவொழுக்கத்தைக் கைவிட்டு விடக்கூடும் என்று கருதிக் கொண்ட நற்ருய் மகளுக்கு அந்தச் செய்தியை உணர்த்த முற்படுகிருள்.

ஒரு நாள் தலைவி ஆடிப்பாடி மகிழ்ந்திருந்து விட்டு அந்தி சாயும் வேளையில் வீடு திரும்புகிருள். அவளைப் பார்த்த நற்ருய் "என் கண்ணே! நீ எங்கே போய்விட்டு வருகிருய்?" என்று வினவுகிருள்.

"எங்குமில்லை! நொச்சிக் காட்டிற்குப்போய் விளையாடி விட்டு வருகிறேன்!" என்கிருள் தலைவி.

"யாரோடு விளையாடிக் கொண்டிருந்தாய்?"

"யாரோடா? அடுத்த வீட்டு எதிர்த்த வீட்டுப் பெண்களோடுதான் விளையாடிக் கொண்டிருந்தேன்!"

"அவர்களெல்லாம் சற்று முன்புகூட இங்கே தானே விளையாடிக் கொண்டிருந்தார்கள்!"

"என்னேடு முதலில் நொச்சிக் காட்டில் விளையாடிக் கொண்டிருந்து விட்டுச் சற்று முன்பு தான் இங்கே வந்தார்கள்!"

"உனக்கு மட்டும் ஏன் இவ்வளவு நாழி?"

"நான் இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்துக் கொண்டே மெல்ல நடந்து வருகிறேன். கதிரவன் அந்தியிலே மேற்கே சாய்வதையும், காட்டு மல்லிகை பூத்துக் குலுங்குவதையும், கவின் நிலவு தோன்றுவதையும், குயில் கூவுவதையும், மயில் ஆடுவதையும் பார்த்து விட்டு வருகிறேன். மயில் ஆடுவது எவ்வளவு அழகாக இருக்கிறது தெரியுமா அம்மா?"

"அதெல்லாம் கிடக்கட்டும். உன் கூந்தலிலே உள்ள இந்தப் புதிய வகைப் பூக்கள் உனக்கு எப்படிக் கிடைத்தன. கூந்தலில் மணங் கமழ்கிறதே!"

"இந்தப் பூக்கள் தோட்டத்திலே எனக்குக் கிடைத்தன. அழகாக இருக்கின்றன அல்லவா?"

"இந்தப் பூக்கள் இந்த ஊரிலேயே கிடைக்கப் பெருதவை ஆயிற்றே! உனக்கு மட்டும் எப்படிக் கிடைத்தன?"

(தலைவி திகைப்புடன்)தோட்டத்தில் ஒருவர் கொடுத்தார்!"

"யார் அவர்?"

"யாரோ ஒருவர்! அவரெல்லாம் எனக்குத் தெரியாது!" என்று மழுப்பிவிட்டுத் தலைவி ஓடி அறைக்குள் புகுந்து கொள்கிருள்.

நற்ருய், தன் களவொழுக்கத்தை அறிந்து கொண்டு விட்டாள் போலும் என்ற ஐயப்பாடு தலைவியின் உள்ளத்தைக் குடைகிறது. முழு உண்மையையும் நன்ருய் தெரிந்து கொண்டு விடுவாளேயானுல், தன்னைத் தடுக்கவும், தண்டிக்கவும் செய்வாள் என்று அஞ்சி, அவற்றினின்றும் தப்பிக்க என்ன செய்யலாம் என்று சிந்திக்கிருள்; திகிலடைந்து இரவு முழுவதும் தூக்கங் கொள்ளாமல் தவிக்கிருள். மறுநாள் பகற் பொழுதில் நற்ருயின் கண்ணில் படாமல் தன்னைத் தானே பாதுகாத்துக் கொண்டு ஒளிவு மறைவாக நடமாடி வருகிருள். மாலைப்பொழுதில் மாளிகையின் முன்றிலில் அண்டை வீட்டுப் பெண்களோடு விளையாடுவதைப் போல் சிறிது நேரம் விளையாடியிருந்து விட்டுப், பிறகு யாருக்கும் தெரியாமல் தலைவனைக் காண நொச்சிக் காட்டிற்கு ஓடிப்போய் விடுகிருள்.

முதல் நாள் இரவு நற்ருய் தன்னை வினவியதையும் அதற்குத் தான் அளித்த விடையையும் தலைவனிடம் கூறி, இனித் தான் இங்கு இருந்தால் தாய் தன்னைப் பற்றிய முழு உண்மையையும் தெரிந்து கொண்டு, தன்னை வெளியே வொட்டாமல் தடுத்து வீட்டிலே காவலிற் போட்டுத் தண்டிப்பாள் என்று கூறித் தான் தப்பிக்க ஒரு வழி கூற

வேண்டும் என்று தலைவனிடம் கேட்கிருள்.

(தலைவன் நீண்ட நேரம் சிந்தித்து) "நாமிருவரும் இன்று இரவோடிரவாக வெளியூருக்கு ஓடிப்போவதைத் தவிர வேறு வழியெதுவும் தென்படவில்லை!" என்று கூறுகிருன்.

தலைவி தலைவனின் கருத்தை ஏற்றுக்கொண்டு அவனுடன் போக இசைகிருள். இருவரையும் அறியாத வேற்றூர் ஒன்றிற்குப் பொழுது சாய்ந்தபிறகு இருவரும் புறப்படுகின்றனர். நில வொளியைத் துணையாகக் கொண்டு தனி வழியே நெடுந் தொலைவிலுள்ள ஊருக்குப் புறப்பட்டுப் போகின்றனர்.

இரவு நெடுநேரமாகியும் தலைவி வீடு திரும்பாததைக் கண்ட நற்றுய் கவலையுற்றுக் கலங்குகிருள். மகள் எங்குப் போயினளோ, என்ன செய்தாளோ, அவளுக்கு என்ன நேரிட்டதோ என்று எண்ணி நற்றுயும் தந்தையும் புலம்புகிறார்கள். செவிலித்தாய் அக்கம் பக்கத்தில் தலைவியைத் தேடிப் பார்த்துக் கிடைக்கப் பெருமல் தவித்துக் கண்ணீர் மல்குகிருள். நொச்சிக் காட்டிற்குச் சென்று தேடிப்பார்த்து வர

தாய் செவிலியை அனுப்பிவைக்கிருள்.

செவிலி நொச்சிக் காட்டின் பல பகுதி களிலும் சென்று தேடிப்பார்த்து விட்டு, வெளியூர்ச் சாலை ஒன்றின் அருகில் வந்து நிற்கிருள். வழிப் போக்காளர்கள் சிலர் அவ்வழியே வந்துகொண்டிருக்கின்றனர். செவிலி அவர்களை அணுகி, தலைவியின் அடையாளங்களைக் கூறி, அப்படிப்பட்ட ஒரு பெண்ணைச் சாலையிலே பார்த்ததுண்டா என்று வினவுகிருள். அப்படிப்பட்ட பெண் ஒரு இளைஞனோடு செல்வதைச்சிறிது தொலைவுக்கு அப்பால் பார்த்ததாக அவர்கள் கூறுகிருர்கள்.

தலைவி தலைவனோடுதான் போய் விட்டாள் என்பதையும், ஊராரின் அலர் உண்மைதான் என்பதையும் உணர்ந்து கொண்ட செவிலி ஏக்கத்தோடு வீடு திரும்புகிருள்.

தலைவி தலைவனுடன் போய் விட்ட செய்தியை அறிந்த நற்றுய் மிகவும் கலக்கங்கொண்டு வருந்தியழுகிருள். இறந்தகால நிகழ்ச்சிகளையெல்லாம் மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்திப் பார்க்கிருள். பிறகு செவிலியைப் பார்த்து, "எல்லாம் என்னுடைய குற்றமே ஒழிய, மகளுடைய குற்றம் அல்ல. அவள் மேற்கொண்ட வழி அறிநெறியின் பாற்பட்ட ஒன்றுதான். காதல் கொள்வது என்பது வியப்புக் குரியதொன்றுயிற்றே என்று எண்ணி நான் வாளாயிருந்து விட்டது என் குற்றந்தான். ஊரிலுள்ள வம்புப் பெண்கள் அலர் தூற்றும்போதெல்லாம், நான் ஏதும் அறியாதவள் போல் அதுபற்றியே பேச்சு மூச்சு விடாமல் வாளா இருந்து விட்டேன். நேற்று நான் மகளை நோக்கி "உன்னுடைய கூந்தல் பழைய மணமில்லாமல் புது மணங் கமழ்கிறதே அதற்குக் காரணம்" என்றுவினவினேன் அவள் தகுதியான விடை கூருமல் ஓடிப் போய் ஒளிந்துகொண்டு விட்டாள். உண்மை நிலையை நான் தெரிந்து கொண்டு விட்டேன் என்று அறிந்தோ என்னவோ அவள் ஊரைவிட்டே ஓடிப்போய்விட்டாள். நான் முன்கூட்டியே அவளது இயல்பைத் தெரிந்து வைத்திருந்தும் அவளைப் பாதுகாக்காமல் இருந்ததால், நான்தான் குற்றம் செய்துவிட்டேன் என்று கூறிக்கொள்ள வேண்டியிருக்கிறது!" என்று வருந்திக் கூறுகிருள். செவிலி நற்றுயைத் தேற்றுகிருள்!

* * *

இது நற்றிணை 143ஆம் செய்யுளின் உட்கருத்தைத் தாங்கி நிற்பதாகும். இந்த நற்றிணைச் செய்யுள் மனைமருட்சி என்ற பிரிவின் பாற்பட்ட பாலைத் திணையைச் சார்ந்ததாகும். இந்தச் செய்யுளை இயற்றியவர் **கண்ணகாரன் கொற்றனர்** என்ற புலவராவார். இவர் பாலைத் திணையைப் புனைந்து பாடுவதிலே வல்லவர் என்பது இந்தச் செய்யுளிலிருந்து தெரிய வருகிறது. இந்தப் பாட்டைத் தவிர இவர் பாடியதாக வேறு எந்தப் பாட்டும் கிடைத்திலது.

ஐதே கம்ம யானே ஒய்பெனத்
தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றத்து
ஓரை ஆயமும் நொச்சியும் காண்தொறும்
நீர்வார் கண்ணேன் கலுழும் என்னினும்
கிள்ளையும் கிளையெனக் கூஉம் இளையோள்
வழுவிலள் அம்ம தானே குழீஇ
அம்பல் மூதூர் அலர்வாய்ப் பெண்டிர்
இன்னா இன்னுரை கேட்ட சின்னாள்
அறியேன் போல உயிரேன்
நறிய நாறுநின் கதுப்பென்றேனே.

[நற்றிணை—143]

[பொழிப்புரை: ஏவலாளர் கொண்டுவந்த மணலால் பரப்பப்பட்ட அழகிய மாளிகையின் தெரு முற்றத்தில், பொம்மை விளையாட்டு விளையாடுகின்றதோழியர் கூட்டத்தையும் ஆடிப்பாடி மகிழும் இடமாகிய நொச்சிக் காட்டையும்காணுந்தோறும் யான் விரைய நீர் வடிகின்ற கண்ணையுடையேனுகி அழுகின்ற என்னைக்காட்டிலும் அவள் வளர்த்த கிளி 'அன்னுய், துயில் கொள்ளுகிருயா?' என்று கூவும்; இவைநிற்ப என் இளம் மகள் தானும் குற்றமுடையவளல்லள்; அவள் கொண்ட காதல் மிக்க வியப்புடையதாய் இருக்கிறது; ஆரவாரம் மிக்க இப்பழைய ஊரின் கண்ணிடத்திலுள்ள அலர் தூற்றும் வாயையுடைய வம்புப் பெண்டிர் பலரும் ஒரு சேரக்கூடிக் கூறுகின்ற கொடிய இனியவுரை கேட்ட சில நாள்வரையில் யாதொன்றையும் அறியாதவள்போல பேச்சு மூச்சு விடவில்லை; பின்னரும்மிகவாக அலரெழுதலாலே ஒரேயொரு பொழுது என் மகளை நோக்கி உன் கூந்தல் பண்டை மணமின்றி வேறு புது மணங் கமழ்கின்றதே அதற்குளென்ன காரணம் என்று வினவினேன்; அவள் தகுதியான விடை கூறவில்லை; முன்னரே அவளது இயல்பை அறிந்து வைத்தும் பாதுகாவாமையின் யானே குற்றமுடையவளாயினேன். ஐது-வியப்புக்குரியது; ஞெமிரிய-பரப்பிய; திருநகர்-மாளிகை; ஓரை-மகளிர் பொம்மை கொண்டுவிளையாடும் ஒருவகைவிளையாட்டு; ஆயம்-கூட்டம்; கிள்ளை-கிளி: அம்பல்-ஆரவாரம்; கிளைத்தல்-விளித்தல்; கதுப்பு-கூந்தல்]

* * *

பெற்றோர் அறியாவண்ணம் தக்க பருவம் அடைந்த ஆணும் பெண்ணும் தூய காதலுணர்வால் பிணைப்புண்டு களவொழுக்கம் நடத்தலும், தாய் தந்தையர் காதலரின் கருத்துக்குமாருக நடப்பார்கள் போல் தெரியும்போது, யாரும் அறியாமல் காதலர் ஊரைவிட்டு வேற்றூருக்கு ஓடிவிடுதலும் ஆன பழக்கங்கள் அறநெறியின்பாற் பட்டவை என்றே பண்டைத்தமிழர்கள் கொண்டிருந்தார்கள் என்பதை இச் செய்யுளின் மூலம் இனிது அறியலாம்.

தலைவனும் தலைவியும் ஓடிப் போய் விட்டதை அறநெறி என்று நற்றுயே ஒப்புக்கொண்டதாகக் கூறப்பட்டிருப்பதும், தலைவியின் களவொழுக்கத்தை நற்றுய் நன்கு அறிந்திருந்தும் ஏதும் அறியாதவள் போல் தான் நடித்துவந்ததாக அவள் வாயாலேயே கூறப்பட்டிருப்பதும் வியந்து மகிழ்வதற்குரியனவாகும்.

ஊரிலுள்ள வெட்டிப் பெண்டிர்கள் ஒருவருக்கொருவர் காதோடு காதுவைத்துக் குசுகுசுவென்று வதந்திகளை ஊரெங்கும் பரப்பி விடுதற்கு அலர் தூற்றுதல் என்று பெயர்.

மாளிகையின் முற்றத்தில் மணலைப் பரப்பியிருத்தல், அத்தகைய மணல் முற்றத்தில் பெண்கள் கூடியிருந்து பொம்மை விளையாட்டு விளையாடுதல் கிளியோடு பேசுதல், ஊரிலுள்ள வெட்டிப் பெண்டிர் வதந்திகள் பரப்புவதைத் தொழிலாகக் கொண்டிருத்தல், காதலியின் கூந்தலில் காதலன் தனக்கு விருப்பமான நறுமண மலர்களைச் சூடுதல் போன்ற பழக்க வழக்கங்கள் இச்செய்யுளில் உணர்த்தப்பட்டிருக்கின்றன.

ஒத்த நலமுடைய தலைவனும் தலைவியும் காதல் கொள்ளுதல் அறவழி ஆதலால், அந்தச் செய்தி தாய்க்கு இனியவுரையாகவும், இன்னுனுடன் இவள் களவொழுக்கங் கொண்டிருக்கிருள் என்று பிறர் பழித்துக் கூறக் கேட்கவேண்டியிருத்தலால் அந்தச்செய்தி தாய்க்கு இன்னுவுரையாகவும் படுவதால் அதனைக் குறிப்பிட வந்த புலவர் 'இன்னா இன்னுரை' என்று அழகுபடக்கூறினர்.

பேச்சுக்குச் சமதர்மம், விருந்துக்குப் பிர்லா !

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு கோடி இரண்டு கோடியல்ல, எழுபது எண்பது கோடி என்று மக்களால் புரிந்து கொள்ளமுடியாத அளவு பண உலகில் கொடிகட்டி ஆளுபவர்! இந்தியப் பொருளாதார மார்க்கட்டில் பிர்லாவின் குடும்பத்தினர் நுழையாத பங்கு கிடையாது. சிலந்தி வலை பின்னுவதைப் போல எல்லாத் துறையிலும் பிர்லாவின் "முதலாளித்துவ" வலை வீசப்பட்டுள்ளது.

பிர்லா குடும்பத்தினர் ஆதிக்கத்தில் பாங்குகள், சுரங்கங்கள், பஞ்சாலைகள், சணல் ஆலைகள், சர்க்கரை ஆலைகள், மோட்டார் தொழிற்சாலைகள், பேப்பர் மில்கள், இயந்திர உற்பத்திசாலைகள், இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் இன்ன பிற நாட்டின் பொருளாதாரத்தை ஆட்டிப்படைக்கும் தொழில் துறைகளெல்லாம் இருக்கின்றன, அவற்றில் முக்கியமான சிலவற்றைக் கீழே காட்டுகிறோம்.

		மூலதனம் :
பாங்க் :		
1.	யுனைடெட் கமர்ஷியல் பாங்க்	—51 கோடி 84 லட்சம்
பஞ்சாலைகள் :		
2.	பிர்லா காட்டன் ஸ்பின்னிங் ஆண்டு வீவிங் மில்	— 1 கோடி 43 லட்சம்
3.	இந்துஸ்தான் உல்லன் மில்	— 36 லட்சம்
4.	ஜெயசீ டெக்ஸ்டைல்	— 51 லட்சம்
5.	கோசோராம் காட்டன் மில்	— 2 கோடி 7 லட்சம்
6.	சட்லஜ் காட்டன் மில்	— 1 கோடி 86 லட்சம்
சணல் ஆலைகள் :		
7.	பிர்லா ஜூட் மானுபாக்சரிங் கம்பெனி	— 3 கோடி 16 லட்சம்
8.	ஹௌரா ஜூட் மில்	— 30 லட்சம்
சர்க்கரை ஆலைகள் :		
9.	பாரத் சர்க்கரை மில்	— 46 லட்சம்
10.	நியு இந்தியா சர்க்கரை ஆலை	— 53 லட்சம்
11.	அப்பர் கான்ஜஸ் சுகர் மில்	— 1 கோடி 3 லட்சம்
இயந்திர உற்பத்தி சாலை :		
12.	இந்துஸ்தான் மோட்டார் கம்பனி	— 5 கோடி 60 லட்சம்
13.	டெக்ஸ்டைல் மிஷினரி கம்பெனி	— 1 கோடி 46 லட்சம்
14.	ஓரியண்ட் பேப்பர் மில்	— 1 கோடி 87 லட்சம்
15.	பாரத் ஏர்வேஸ் லிமிடெட்	— 97 லட்சம்
இன்ஷூரன்ஸ் கம்பெனி :		
16.	நியு ஏஷியாடிக் இன்ஷூரன்ஸ் கம்பெனி	— 2 கோடி 6 லட்சம்
17.	ரூபி ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி	— 2 கோடி 13 லட்சம்
நிலக்கரிச் சுரங்கம் :		
18.	மத்திய இந்திய நிலக்கரிச் சுரங்கம்	— 50 லட்சம்
19.	மேற்கு வங்க நிலக்கரிச் சுரங்கம்	— 55 லட்சம்

இவற்றின் கீழ் சுமார் 79 கோடி ரூபாய் மூல தனமாகப் போட்டு, அவ்வளவு பெரிய பண ஏகாதிபத்தியத்திற்கு நடு நாயகமாக - சக்ராதிபதியாக விளங்குபவர் ஜி. டி. பிர்லா அவர்கள்! பிர்லாவின் விரல் அசைந்தால், ஒரு புதிய கம்பெனி உண்டாகும். அவர் புருவம் நெரித்தால் பல தொழில் துறைகளில் ஈடு பட்டிருக்கும் சின்னஞ் சிறியவர்கள் மிரண்டு ஓடுவார்கள்! கோடீசுவரர்களுக்கெல்லாம் கோடீசுவரராகப் பிர்லா விளங்குகிறார்.

இந்திய முதலாளித்தனத்திற்கு முதுகெலும்பாக விளங்கும் பிர்லாவைத்தான் காங்கிரசு தனது "ஆப்த நண்பனாக" ஏற்றுக்கொண்டிருக்கிறது. பிர்லா செய்த "உதவிகளுக்கு" காங்கிரசு தேர்தல் இலாக்காத் தலைவர் பாராட்டுதல் தெரிவித்து விருந்துபசாரம் நடத்துகிறார்.

"அடக்கமாகவும் எளிமையாகவும், கடந்த நாற்பதாண்டுகளில் காங்கிரசுக்கு நான் சேவை செய்ததுபோல் தொடர்ந்து சேவை செய்வேன்!" எனப் பிர்லா அங்கு பாராட்டுக்கு பதிலளித்தாராம். "அடக்கமாக" அவர் சேவை செய்திருக்கிறார். காங்கிரசுத் தலைவர்களுக்கு அந்த அடக்கமான சேவைகள் உதவியாக இருந்திருக்கிறது. ஆனால் தொழில் துறையில் பிர்லாக்கள் செய்கிற "அடக்கமான" செயல்கள் நாட்டு மக்களுக்குச் செய்துள்ள கேடுகள் எண்ணிறந்தன!

பிர்லா குடும்பத்தினர் செய்த "அடக்கமான" செயல்களில் ஒன்றைமட்டும் இங்கு குறிப்பிடுவோம். சண்டைக் காலத்தில் அவர்களுடைய பஞ்சாலை ஒன்றில், கணக்கில் காட்டாமல், கள்ளமார்க்கட்டில் வியாபாரம் செய்து சுமார் 84 லட்சம் ரூபாய்களைச் சேர்த்தார்களாம்! இந்த விபரம் வருமானவரி இலாகாவின் அதிகாரியால் கண்டு பிடிக்கப்பட்டது. ஒரு பஞ்சாலையில், குறிப்பிட்ட இரண்டு மூன்று ஆண்டுகளில், 84லட்சம் ரூபாய்கள் கள்ள மார்க்கட்டில் "அடக்கமாக" லாபமடிக்கப்பட்டதென்றால், யாருக்கும் தெரியாமல், மற்றெல்லாத் தொழில்களிலும் எவ்வளவு லட்சங்கள் "அடக்கமாக" சம்பாதிக்கப் பட்டனவோ சொல்ல முடியாது.

கள்ளமார்க்கட் காரர்களும், கொள்ளை லாபமடித்தவர்களும் யுத்தகால முதலாளிகளும், காண்ட்ராக்ட் எடுத்து 'கனம்' ஆனவர்களும் தான் இன்றைய காங்கிரசுக்குள் இருக்கிறார்கள். காங்கிரசுக்குச் "சேவை" செய்கிறார்கள். காங்கிரசும் அவர்களுக்குத்தான் சேவை செய்கிறது.

பேச்சுக்குச் சமதர்மம் நன்றாக இருக்கிறது; ஆனால் தேர்தலுக்கு, வெற்றிக்கு, விருந்துக்கு, பிர்லாக்கள் அழைக்கப்படுகின்றனர். ○

சட்டசபையில் நமது குரல்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தோழர் க. அன்பழகன்

தமிழ் நாட்டை தமிழ்நாடு என்று அழைக்க இந்த அரசாங்கம் ஏன் தயங்குகிறது? இந்த நாடு தமிழ்நாடு, தமிழ் நாட்டை தமிழ் நாடு என்று அழைப்பது தாயைத் தாய் என்று அழைப்பதுபோலாகும்.

இந்தித் திணிப்பு மிகுந்த வேகத்துடன் நடைபெறுகிறது. இந்தியைக் கல்லூரிகளில் புகுத்துவதுடன், அன்றாட வாழ்க்கையில் அவசியமான தபால்கார்டு, மணியார்டர் முதலியவைகளிலும் இந்தி புகுத்தப்படுகிறது. இந்த அரசாங்கத்திற்கு இதில் அதிகாரமில்லை யென்று சொன்னாலும், தமிழ் அழிக்கப்படுகிறதுஎன்ற முறையிலாவது இதை மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தி நீதிபெறவேண்டும்.

நெய்வேலி நிலக்கரியைப் பயன் படுத்தி, சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்தவும் வேண்டும். கனரகத் தொழில்களை ஆரம்பித்து தொழில்வளத்தைப் பெருக்காவிட்டால், திராவிடம் தேய்ந்துவிடும்.

* * *

தோழர் ஏ. கோவிந்தசாமி

பதவியிலிருந்தபடி போலீஸ் சூழ்ந்துவர, மந்திரிகள் தேர்தல் பிரச்சாரம் செய்தார்கள். தேர்தல் முடிவுகள் வெளியிடப்படுவதில் அவசியமற்ற தாமதங்கள் இருந்தன.

நமது அரசாங்கம் "ஆமாம் சாமி" யாக இருக்கிற காரணத்தால், டில்லி ஆட்சி நம்மைப் புறக்கணிக்கிறது.

காங்கிரசு அரசாங்கம் ஒரு புறம் வனமகோற்சவம் நடத்துகிறது; மறுபுறம் விருத்தாசலம் போன்றபகுதிகளில் காடுகளை அழிக்கிறது. ஏன் இந்த முரண்பாடு?

பண்டிதநேரு வரப்போகிறார் என்பதற்கு நெய்வேலிப்பகுதியிலிருக்கும் ஏழைக் குடும்பங்கள் கிளப்பப் படுகின்றன. அவர்களுக்கு உடனடியாக உதவிதரவேண்டும்.

* * *

தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி

நாட்டில் ஏழ்மை வளர்ந்தபடி இருக்கிறது. பிச்சைக்காரர்கள் அதிகமாயுள்ளது அதை நன்கு காட்டும். பிச்சைக்காரர்களின் பிரச்சினையைத் தீர்க்க நல்ல திட்டங்கள் உருவாக்கப் படவேண்டும்.

இலங்கைவாழ் தமிழர் பிரச்சினை பற்றியும், சுயமரியாதைத் திருமணங்களைச் செல்லுபடியாக்கும் விஷயம் பற்றியும் அரசாங்கம் ஆவன செய்யவில்லை.

தேவிகுளம் பீர்மேடு, மற்றும் தமிழ் நாட்டுடன் சேர வேண்டிய தமிழ்ப் பகுதிகள் தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட வேண்டும். முதல் தடவையாகப் பச்சைத் தமிழர் ஆட்சிக்கு வந்துள்ளதாகச் சொல்லுகிறார்கள். அவருடைய ஆட்சியில் தான் தேவிகுளம், பீர்மேடு பறிபோயிற்று.

* * *

தோழர் எம். பி. சுப்பிரமணியம்

மத்திய அரசாங்க சிப்பந்திகளுக்கும் மாநில அரசாங்க சிப்பந்திகளுக்கும் சம்பளத்தில் பெருத்த வித்தியாசமிருக்கிறது. ஒரே அமைப்பில், ஒரே விதமான வேலையைச் செய்கிற இருபகுதிகளில் இவ்வித வேறுபாடு காண்பிப்பதில் அர்த்தமில்லை.

அரசாங்கத்தின் அடிப்படை நிர்வாகத்திற்கும், ஐந்தாண்டுத் திட்டத் தயாரிப்புகளுக்கும் உறுதுணையாக இருப்பவர்கள் கிராம அதிகாரிகள். ஆனால் அரசாங்கச் சம்பளப் பட்டியலில் மிகத் தாழ்ந்த இடத்தைப் பெற்றிருப்பவர்களும் அவர்களே! அவர்களுடைய குறைகள் தீர்க்கப்பட வேண்டும்.

* * *

எம். செல்வராஜ்

நெய்வேலித் திட்டம் இன்னும் ஆமை வேகத்தில் போய்க்கொண்டிருக்கிறது. நெய்வேலி வட்டாரத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் ஆதரவின்றி விடப்பட்டுள்ளனர், அவர்களுக்கு தகுந்த நிவாரணம் ஒன்றும் அளிக்கப்படவில்லை.

தானியப் பற்றாக்குறையுள்ள பகுதிகளுக்கு மற்ற பகுதிகளிலிருந்து தானியங்களை அனுப்பி ஈடுசெய்யவேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் மார்க்கட் கமிட்டிகள் ஏற்படுத்தி, நெல், கேழ்வரகு போன்ற தானியங்களை அந்தக் கமிட்டியின் அதிகாரத்தில் கொண்டுவரவேண்டும். ○

“மன்றம்” அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி சென்னை-1) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்க
அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. —(தொலை பேசி எண்: 55697)